பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 11 | திங்கட்கிழமை | (23-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 66

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# மாவை தலைமையில் கூட்டமைப்பு இன்று காலை வேட்புமனு தாக்கல்

## கூட்டமைப்பு வேட்பாளர்கள்; மாவீரர்களுக்கு இன்று அஞ்சலி

### உறுதி மொழியும் எடுப்பர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அனைவரும் இன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

இன்று காலை 10 மணியளவில் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் வேட்பாளர்கள் அஞ்சலி செலுத்துவதுடன உறுதி மொழியும் எடுத்துக் கொள்வர்.

பின்னர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள தந்தை செல்வநாயகத்தின் சிலைக்கு வேட்பாளர்கள் அஞ்சலி செலுத்துவர். இதனைத் தொடர்ந்து யாழ்.செயலகத்தில் வேட்பாளர் நியமனப் பத்திரம்தாக்கல் செய்யப்படும்(த)

## வேட்பாளர்கள் நேற்றுக் கையொப்பமிட்டனர்

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் பொதுத் ,தேர்தலில் போட்டியிடுவதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனங்கள் இறுதி வடிவம் பெற்றுள்ளது.**

**ஏற்கனவே வெளியான கூட்டமைப்பு வேட்பாளர் நியமனங்களில் ஒரு சில மாற்றங்கள் செய்யப்பட்டு வேட்பாளர் நியமனம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.**

இதன்படி வேட்பாளர்களின் பெயர் விபரம் வருமாறு,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா (மாவிட்டபுரம், தெல்லிப்பழை), நடராஜா ரவிராஜ்(சாவகச்சேரி),சின்னத்தம்பி சிவமகாராசா(கொல்லன் கலட்டி தெல்லிப்பழை),பொன்னம்பலம் கஜேந்திரகுமார்(யாழ்ப்பாணம்), எம.கே. சிவாஜிலிங்கம்(வல்வெட்டித்துறை), சுரேஸ் பிரேமச்சந்திரன்(கோப்பாய்), யாழ.மாநகரசபை முன்னாள் ஆணையாளர் கந்தையா சிவஞானம (நல்லூர்), ரெலோ சிறிகாந்தா(தீவகம்),பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளான பத்மினி சிதம்பரநாதன் (அராலி) சொலமன் சூ.சிறில் (கோவில் வீதி யாழ்ப்பாணம்), கி.சிவநேசன்(கரவெட்டி) செல்வராசா கஜேந்திரன் (துன்னாலை மத்தி கரவெட்டி)

இதேவேளை தேசியப் பட்டியலில் தேசிய எழுச்சிப் பேரவை சார்பாக ம.க.ஈழவேந்தன், கடற்தொழிலாளர் சமாசச் செயலாளர், சிசூரிய குமார்,விரிவுரையாளர் அ.குமாரவேல, முஸ்லிம் சட்டத்தரணி ஆர்.எம்.இமாம், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் இடம் பெயர்ந்தோர் நலன் புரி சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

மாவை சேனாதிராசாவின் யாழ். அலுவலகத்தில் நேற்றிரவு வேட்பாளர் நியமனம் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவு எட்டப்பட்டதுடன் வேட்பாளர் நியமனப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் களநிலை எவ்வாறு அமைந்தாலும் தமிழ் மக்களை அது பாதிக்காது

### புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்குப் பின்னால் நின்று இனவாதத்தைத் தூண்டிவிட்ட பௌத்த பிக்குகள் தற்போது நேரடியாகத் தேர்தலில் களமிறங்கியிருக்கிறார்கள். எனவே தமிழ் மக்கள் இது குறித்து தெளிவாகப்புரிந்து கொள்ள வேண்டுமென புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளாா.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைந்ததையிட்டு நேற்றுக் கிளிநொச்சி வலய உயர்நிலைப் பள்ளியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையின் இன்றைய தேர்தலில் ஒரு குழப்பநிலை தோன்றியுள்ளது. இனக்கலவரங்களின் சூத்திரதாரிகளான பௌத்தபிக்குகள் தேர்தலில் குதித்திருக்கிறார்கள்.

தேர்தல் களநிலை எவ்வாறு அமைந்தாலும் அது தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் எந்த வேளையிலும் தமிழர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். தலைவர் பிரபாகரன் சமகால அரசியல் சூழ்நிலையில் நிதானமான முடிவுகளை எடுத்து நுட்பமாகச் செயற்பட்டு வருகிறார். இவ்வாறு பாலகுமாரன் தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ஏ.வி.கே.மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழீழ மகளிர் அரசியல் பொறுப்பாளர் மற்றும் கல்வித் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (த)

## ஈ.பி.டி.பி இன்று வேட்பு மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) கூட்டணி இன்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவிருக்கின்றது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தா முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

ஏனைய வேட்பாளர் விபரம் வருமாறு; வி.கே.ஜெகன்,ந.மதனராஜா, (மனோ),எஸ்.தவராஜா, க.மணிபல்லவராஜன்(நிஷாந்தன), பாலநடராஜா (இளையவன்), செல்வி மகேஸ்வரி வேலாயுதம், எஸ்.சிவதாஷன்,எஸ். சீவரத்தினம், பவான்,எஸ்.பாஸ்கரன் மற்றும் ஈ.பி.ஆர்.எல். எவ் சிறிதரன். (த)

## பொதுத் தேர்தலின் ஆரம்பமே அவ்வளவு நல்லதாக இல்லை

### பெபரல் அமைப்பின் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னரான வன்முறைகளைக் கண்காணிக்கும் பணியை ஆரம்பிக்குமாறு ஏற்கனவே நாட்டிலுள்ள 14 வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினருக்கும் பெபரல் அமைப்பு உத்தரவிட்டுள்ளது.

பெபரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோவின் கருத்துப்படி தேர்தல் கண்காணிப்பாளர்கள் அமொிக்கா பிறேசில், அயர்லாந்து, கானா, கென்யா ஆகிய நாடுகளில் இருந்து ஏற்கனவே வந்துள்ளனர். இவர்கள் அனைவரும். வாக்குகள் எண்ணும் வேலைகள் முடிவடையும்வரை அப்பிரதேசங்களிலேயே தங்கியிருப்பர் என்று தெரிவித்தார்.

சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் அதிகாரிகள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாஷிங்டன் மாநாடு குறித்து விடுதலைப் புலிகளுக்கு விளக்கம்

### எரிக்சோல்ஹெய்ம் பாலசிங்கத்தை சந்திப்பார்

(கொழும்பு)

வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது குறித்த மீளாய்வு மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கப்படவுள்ளது.

இதற்காக, நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை எதிர்வரும் புதன்கிழமை சந்திக்கவுள்ளார். இதேவேளை, இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் பிரான்ஸ் பிரட்ஸ்கர் இதேதினம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் தினத்தன்று சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புக் குழு பணி புரியும்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல் காலங்களில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு நேரடியாக எந்தப் பணிகளிலும் ஈடுபடாது எனினும் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் தமது கடமைகளைச் செய்யுமென கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் காலங்களில் படையினரின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள், படையினரின் கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் அனைத்திலும் மக்கள் நடமாடக்கூடிய பாதுகாப்பான நிலைமையினை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்புகுழு தமது கண்காணிப்பு நடவடிக்கையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவுடன் சந்திப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப்பிரதிநிதிகளுக்கும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை 10 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இருவருடம் ஆகியும் உயர் பாதுகாப்பு வலயங்களினுள் மக்களை குடியமர்த்துவதற்கு ஏற்ற நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இதனால் இடம் பெயர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்து வருகிறது.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இரண்டு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் பல மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று கல்வி கற்க முடியாத நிலை தோன்றியுள்ளது இவற்றிற்கு உரிய சாதகமான பதிலை தமக்கு தரவேண்டுமென பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கண்காணிப்புக்குழுவைக் கேட்டுள்ளனர்.

இதற்கு பதிலளித்த கண்காணிப்புக் குழு இது தொடர்பாக நடவ

(12ஆம் பக்கம் பார்க்க)

# உவகையுடன் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்

## யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்த

# ஓவியக் கலைஞர்

**கலைஞானகேசரி, வண்ணக் கலையரசு, வர்ணகலாரூபன், ஓவியமாமணி, சித்திரகலாமணி, கலாரத்னா, வர்ணக் கலைவேந்தன், சித்திரகலைஞானி, சித்திரகலாநிதி, ஓவியவாரிதி, சித்திரகலாசூரி, ஓவியக்கலையரசன்**



# உயர்திரு. கந்தையா சுந்தரலிங்கம்

## அவர்கள்

**04.02.2004 அன்று இலங்கை இந்து கலாசாரத் திணைக்களத்தினால்**

# “கலாபூஷணம்”

**விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதையிட்டு அவரை உவகையுடன் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் பணி மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இறைஞ்சுகின்றோம்.**

**வாழ்த்துவோர்:**

திரு. க. ஸ்ரீகாந்தா குடும்பத்தினர் (சுவிஸ்)
திரு. க. ஸ்ரீகருணா குடும்பத்தினர் (சுவிஸ்)
திரு. க. ஸ்ரீகுலேன் குடும்பத்தினர் (சுவிஸ்)
திரு. க. ஸ்ரீரவி குடும்பத்தினர் (சுவிஸ்)
திரு. வ. சோமசுந்தரம் குடும்பத்தினர் (சுவிஸ்)
திரு. ந. ஸ்ரீமுருகன் குடும்பத்தினர் (பிரான்ஸ்)
க.நாகேஸ்வரி (கொழும்பு)

ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

(சி-7286)

# சமாதானப் பேச்சுகளின் தடையால் ஜப்பான் ஏமாற்றமடைந்துள்ளது

## இலங்கைக்கான தூதுவர் அகியோசூடா கவலை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாமல் தடைப்பட்டிருப்பதனால், இந் நிலைமைகள் குறித்து ஜப்பான் அரசு பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகியோசூடா கவலை தெரிவித்துள்ளார்.

"சுகாதார நடவடிக்கைளூடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்" எனும் ஆசிய மருத்துவ வைத்தியர் அமைப்புக்கான நிதி வழங்கல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, அகியோசூடா இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு வருட காலமாகிறது. இக் காலப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆயினும், இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருந்தாலும், அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தொடர்ந்தும போர் நிறுத்த உடனபடிக்கையைப் பேணி வருகின்றனர். உடன்படிக்கை பேணப்பட்டு வருவது குறித்து ஜப்பான் அரசு பாராட்டும் அதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருப்பது குறித்துக் கவலையடைந்துள்ளது.

அதேவேளை, ஏப்ரலில் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் இங்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என ஜப்பான் அரசு நம்பிக்கையுடன இருக்கின்றது எனக்குறிப்பிட்டார். (ந-18)

## மாணவர்க்கு உதவி

(கல்வியங்காடு)

வீடு எரியுண்டதால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இருபாலை மக்கள் நலன்காக்கும் பிரிவினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சிறுப்பிட்டிமேற்கு (J/272) கிராமசேவையாளர் பிரிவில் வசித்து வரும் மாணவர்களுக்கே கல்வி ஊக்குவிப்பு செயற்பாட்டிற்காக புத்தகங்களும் உடுபுடவைகளும் கூரை விரிப்புக்களும் சிறுப்பிட்டி மேற்கு அரசினர் தமிழ்க கலவன் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன

(யே-74)

## தேர்தல்கால வன்முறைகள் தென்னிலங்கையில் அதிகரிப்பு

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தென்னிலங்கையில் அதிகரித்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல்மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளில் பல கட்சிகளும் துரிதமாக ஈடுபட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகளின்போது ஏற்படும் கருத்து முரண்பாடுகளால் இவ்வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அந்த அடிப்படையில் களனி, அம்பாந்தோட்டை, குளியாப்பிட்டிய, கேகாலை, மாத்தளை போன்ற பகுதிகளில் இருந்து இற்றைவரை 30இற்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், தேர்தல் சட்டங்களை மீறி வன்முறைகளிலும் மோசடிகளிலும் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் திடீர் சோதனைகள்,கைதுகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்துடன் செயற்படுவர் எனவும் தெரியவருகிறது.(யே-61,4)

## சங்கரியின் யோசனைகள் காலம் கடந்த ஞானம்

### பி.பி.சிக்கு ரவிராஜ் பேட்டி

(லண்டன்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் யோசனைகளும் திட்டங்களும் காலம் கடந்த ஞானமாகவே தோன்றுகிறது.

இவ்வாறு கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான என். ரவிராஜ் தெரிவித்தார்.

பி.பி.சி தமிழோசைக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஜனநாயகக் கட்சிகளை உதறித் தள்ளிவிட்டு தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலை எதிர்கொள்ள முடியாது.

தேர்தலில் போட்டியிடுவது குறித்துப் பேச்சுக்கள நடத்தி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசித்து ஏகமனதாக ஒற்றுமையான ஒரு முடிவை எடுத்திருக்கின்றோம்.

அந்த முடிவின் அடிப்படையில்தான் நாங்கள் செயற்படுகின்றோம். இதைவிட மேலும் கலந்துரையாடுவதற்கோ சிந்திப்பதற்கோ நேரம்போதாது.

நேரம் மட்டும்தான் பிரச்சினையா? அல்லது வேறு பிரச்சினைகளும் இருக்கிறதா? எனக் கேட்கப்பட்டதற்கு,

இது நான் எடுக்கக்கூடிய முடிவு அல்ல, கூட்டமைப் பில் உள்ள நான்கு கட்சிகளும் விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசித்தே முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர் பட்டியலைத் திருத்துவதான சங்கரியின் கோரிக்கை என்னைப் பொறுத்தவரையில் காலம் கடந்த ஞானமே. நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது.

நான்கு கட்சி வேட்பாளர்களும் எந்தச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடப்போகிறீர்கள் எனக் கேட்கப்பட்டதற்கு,

அதைப்பற்றி பலவிதமான பிரச்சினைகள் எங்கள் மத்தியில் இருக்கின்றன. இது பற்றிய முடிவுகளை நாங்கள் எடுப்போம். இப்போது அது பற்றிக் கூறமுடியாது. அது பற்றி ஒரு சில தினங்களில் முடிவு தெரியும் என்றார். (த)

## கருத்தரங்கு

(தனங்கிளப்பு)

தென்மராட்சி கல்வி வலயத்தில் தரம்7,8ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாழ்க்கைத்திறன கருத்தரங்கு எதிர்வரும் 28ஆம் திகதி மீசாலை வீரசிங்கம மகா வித்தியாலயத்தில் நடைபெறும.

இதில் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிபபாளர்வ.செல்வராசாகேட்டுள்ளார். (ந-37)





வடபிராந்திய நீர்வாகக் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு பற்றிய அஞ்சல்மா அதிபர் கே.எ.எஸ். சேனாதீர,பிரதி அஞ்சல்மா அதிபர் ஆர்.பி.டி. காமினி, வடபிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரட்ணம், பிரதேச அஞ்சல் அத்தியட்சகரும் பிராந்திய நிர்வாக உத்தியோகத்தருமான சிவராஜசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதைமுதலாவது படத்திலும், மேற்படி கலந்துரையாடலில் பங்கு பற்றிய யாழ். மாவட்ட தபாலதிபர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:ஜி.சாங்கன்)

## அஞ்சல்மா அதிபர் சேனாதீர யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அஞ்சல் அலுவலகங்கள், தபாலகங்கள் போன்றன எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிவதற்கும் அதற்கான தீர்வைக் கண்டறியும் பொருட்டும் அஞ்சல்மா அதிபர் கே.எ.எஸ். சேனாதீர தலைமையில் நேற்று முன்தினம் வருகை தந்த குழுவினர் யாழ். மாவட்ட தபால் அதிபர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை வடபிராந்திய நிர்வாக காரியாலயத்தில் நடத்தினர்.

இக்கலந்துரையாடலுக்கு வட பிராந்திய அஞ்சல்மா அதிபர் என். ஜெயரட்ணம் தலைமை தாங்கினார்.

யாழ். வருகை தந்த அஞ்சல்மா அதிபருடன் பிரதி அஞ்சல்மா அதிபர் ஆர்.பி.டி. காமினி உட்பட அஞ்சல் திணைக்களத்தின உத்தியோகத்தர் குழுவும் வருகை தந்துள்ளது. பிராந்திய அஞ்சல் அத்தியட்சகரும், பிராந்திய நிர்வாக உத்தியோகத்தருமான சிவராஜசிங்கம், பிராந்திய கணக்காளர்,யாழ். மாவட்ட தபாலதிபர்கள் ஆகியோரும் மேற்படி கலந்துரையாடலில் பங்கு பற்றினர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்படும் நிலையில் உள்ள தபாலகங்கள், தபாலகங்கள் எதிர்நோக்கும் ஆளணி மற்றும் அலுவலக உபகரணங்கள் பற்றாக்குறை, வவுனியாவில் தேங்கிக்கிடக்கும் பொதிகள், தேர்தல் தொடர்பான வேலைகள் பற்றி மேற்படி கலந்துரையாடலில ஆராயப்பட்டது.

அஞ்சல் அலுவலகங்கள், தபாலகங்கள் எதிர்நோக்கும் ஆளணி நிரப்புதல், கட்டடங்களை திறந்து வைத்தல் தொடர்பாக கொழும்பு திரும்பியவுடன் அறிவிப்பதாக அஞ்சல்மா அதிபர் கே. எ.எஸ. சேனாதீர உறுதியளித்தார்.

அலுவலகங்களுக்கு வேண்டிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய நிதியினைத் தாம் தருவதாகவும் அந்நிதியின் மூலம் உபகரணங்களை கொள்வனவு செய்யும் படி அஞ்சல்மா அதிபர் கூறினார்.

தேர்தல் தொடர்பான சகல வேலைகளும் அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் மூலமே செய்யப்படும் எனவும, இதன் பொறுப்புக்கள் யாவும தம்மையே சாரும் எனவும் கூறிய அஞ்சல்மா அதிபர் வடபகுதிக்கான வாக்காளர் அட்டைகள் விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்படும் எனவும் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தபாலகங்களில் 80 சதவீதமானவை வீடுகளில் இயங்குவதாகவும், தொலைத்தொடர்பு வசதி, பதிவாளர்கள் இன்மை போன்ற பல பிரச்சினைகள் உள்ளதாகவும் கலந்துரையாடலில் பங்கு பற்றி தபாலதிபர்கள் தெரிவித்தமைக்கு இசைவாகத் தபாலகக் கட்டடம் சம்பந்தமாக விரைவில் நல்லதொரு பதிலினை அனுபபுவதாகவும், பதிவாளர்கட்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அந்தந்த தபாலதிபர்கள தம்முடைய பொறுப்பில் தற்காலிகமாக பதிவாளரை நியமிக்கலாம எனவும் அஞ்சல்மா அதிபர் அனுமதியளித்தார். தற்காலிகமாக பதிவாளர் பதவிக்கு அமர்த்தப்படும் ஊழியர் கல்வித் தகைமையுடையவராகவும், நம்பிக்கையானவராகவும் இருத்தல் அவசியம. தற்காலிக நியமனம் வழங்கப்படும பதிவாளர் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளும் அந்தந்த பிரதேச தபாலதிபர்களையே சாரும் எனவும் அஞ்சல்மா அதிபர் கே. எ. எஸ். சேனாதீர கூறினார். தபாலகங்களுக்குரிய தொலைத்தொடர்பு வசதிகளைச் செய்து தருவதாகவும் வாக்குறுதியளித்தார்.

மிக முக்கியமான தேவை யேற்பட்டால் அன்றி வேறு எந்தக்காரணங்களுக்காகவும் தேர்தல் கடமையில் உள்ள ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படமாட்டாது எனவும், தேர்தல் கடமைகளில் நிரந்தர நியமன ஊழியர்களை மட்டும் பயன்படுத்துவது சிறப்பாக இருக்கும் எனவும் கூறினார்.

வவுனியாவில் தேங்கிக்கிடக்கும் தபால் பொதிகளை தரை வழியாக யாழ். மாவட்டத்திற்கு எடுத்துச்செல்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. எனினும் மேற்படி கலந்துரையாடலில் எதுவித முடிவும் எட்டப்படவில்லை. அது தொடர்பாக தலைமையகம் திரும்பியவுடன் சம்பந்தப்பட்டோருடன் கதைத்து பதில் அனுப்புவதாக அஞ்சல்மா அதிபர் கூறினார். அஞ்சல்மா அதிபர் வருடத்திற்கு இரு தடவையாவது யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்து எமது பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறியப்பட வேண்டும் என வடபிராந்திய பிரதி அஞ்சல்மா அதிபர் என். ஜெயரட்ணம் கோரிக்கையை முன் வைத்தார். (யே-3)

# மார்ச் மாதம் 10ம் திகதி தொடக்கம்

# இந்தியா பாகிஸ்தானுடன் மோதும்

## அட்டவணையும் வெளியிடப்பட்டது

நீண்ட நாட்களாகக் கிரிக்கெற் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப பட்டுவந்த இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெற் தொடர் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என ஊஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெற் சபையின் நிறைவேற்று அதிகாரி ரமீஸ்ராஜா பெருமிதமும் திருப்தியும் வெளியிட்டுள்ள அதே வேளை உலகக்கிண்ணத்தை வெற்றி கொண்ட முன்னாள் பாகிஸ்தான் அணியின் தலைவர் இம்ரான்கான தற்போதைய பாகிஸ்தான் அணிக்கு நெறியாளராக செயற்படச் சம்மதம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 10ஆம திகதி இந்திய அணி பாகிஸ்தான் செல்கிறது. இந்திய அணி ஒரு பயிற்சிப் போட்டியிலும் 5 ஒருநாள் மற்றும் 3டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இந்


இன்ஸமாம்


கங்குலி

திய அணி இந்தப் போட்டிகளை முடித்துக் கொணடு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி இந்தியா திரும்பவுள்ளது. இப் போட்டி தொடர்பான போட்டி விப ரங்கள் நேற்று வெளியிடப்பட்டுள ளன.

**போட்டி விபரம்,**

மார்ச்-11 பயிற்சிபபோட்டி-லாகூர்.

**ஒருநாள் போட்டிகள்**

மார்ச் 13-முதலாவது ஒருநாள் போட்டி-கராய்ச்சி, மார்ச் 16-இரண்டாவது ஒருநாள் போட்டி ராவல் பிண்டி (பகல் இரவு)

மார்ச்-19 மூன்றாவது ஒருநாள் போட்டி-பெஸாவர்.

மார்ச்-21-நான்காவது ஒருநாள் போட்டி-லாகூர்.

மார்ச்-27 ஐந்தாவது ஒருநாள் போட்டி-லாகூர்.

**டெஸ்ட் போட்டி**

மார்ச் 28-ஏப்ரல் 1-முதலாவது டெஸ்ட்போட்டி-மல்ரன்.

ஏப்ரல்-5-9இரண்டாவது டெஸ்ட் போட்டி-லாகூர்.

ஏப்ரல் 13-17 மூன்றாவது டெஸ்ட் போட்டி- ராவல் பிண்டி. (யே-121)

# அவுஸ்திரேலியாவை இலங்கை ஒரு ஓட்டத்தால் வென்றது

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் கொழும்பு தம்புள்ள விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள சர்வதேசப் போட்டியில் இலங்கை அணி ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சனத் ஜெயசூரிய, மாவன அத்தப்பத்து, குமார் சங்ககார ஆகியோர் முறையே 55, 47, 39 ஓட்டங்களைப் பெற்றனர். மஹேல ஜெயவர்த்தன 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மைக்கல் கிளாக் 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியில் 246 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய அவுஸ்திரேலியா கடைசி ஓவரில் 8 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இருந்தது. எனினும் கடைசி ஓவரை வீசிய சமிந்தவாசின் பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாத அவுஸ்திரேலிய அணி கடைசி ஓவரில் 6 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அவுஸ்திரேலியா அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மத்தியூ ஹெய்டன் 93 ஓட்டங்களையும் ரிக்கி பொண்டிங் 69 ஓட்டங்களையும் அன்ரூ சைமன்ஸ் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நேற்றைய ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராகவும் இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1:1 என்ற நிலையில் இரு அணிகளும் உள்ளன. (ச)

# சனத்ஜயசூரிய மீண்டும் சாதனை நிலைநாட்டினார்

இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை தம்புள்ளையில் நடைபெற்ற போட்டியின் போது இலங்கை சார்பாக சனத் ஜயசூரிய ஒரு புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். இலங்கை சார்பாக அதி கூடுதலான ஒருநாள் போட்டிகளில் ஈடுபட்ட இலங்கை வீரர் என்ற சாதனையையே சனத் ஜயசூரிய நிலை நாட்டியுள்ளார். இதுவரை சனத்ஜயசூரியவும், அரவிந்தடி சில்வாவும் 308 ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருந்தனர் எனினும் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற போட்டியுடன் சனத் ஜயசூரிய 309 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்ற போட்டியுடன் 309 போட்டிகளில பங்குபற்றி 9180 ஓட்டங்களைப் பெறறுள்ளார். இதில் அதி கூடுதலான ஓட்டமாக இந்தியாவுக்கு எதிராக 189 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவரது துடுப்பாட்ட சராசரி 31. 95 ஆகும். 16 சதங்களையும் 54 அரைச்சதங்களையும் பெற்றுள்ள ஜயசூரிய 102 பிடிகளைப பிடித்துள்ளார். இப்போட்டித் தொடர்



மூலம் ஜயசூரிய ஒருநாள் போட்டிகளில் இலங்கையில் அதி கூடுதலான ஓட்டங்களைப் பெற்றுள்ள அரவித்தனின் சாதனையை முறியடிப்பாரென எதிர் பார்க்கப்படுகினறது. (யே-121)




**நடைபெற்றுவரும் பங்களா தேசு டனான டெஸ்ட் தொடரில் சிம்பாப்வே அணியின் நட்சத்திரப் பந்துவீச்சாளர் ஹீத்ஸ்ட்றீக் ஆடுகளத்தில்.**

# மகளிர் உலகக்கிண்ணத்தை ஜேர்மனி வெற்றி கொண்டது

ஜேர்மனிகரும் சுவீடனுக்கு மிடையில் நடைபெற்ற பெண்களுக்கான உலக உதைபந்தாட்டத்தின் இறுதிப்போட்டியில் 2-1என்ற அடிப்படையில் ஜேர்மனி சுவீடனைத் தோற்கடித்து முதற்தடவையாக வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதற்கு முன்னதாக நடப்புச் சமபியனானகவிருந்த அமெரிக்காவை 3-0என்ற கோல்கணக்கில் அரையிறுயாட்டத்தில் வெற்றிபெற்ற ஜேர்



மன் அணி மேலதிக நேர ஆட்டத்தில் மாற்றீடாகக் களமிறங்கிய நியாகுவேன்சர் மூலம் வெற்றிக் கோலைப் பெற்றுக்கொண்டது. இந்த வெற்றி மூலம் உலககிண்ணத்தை வெற்றி கொண்ட மகளிர் அணியொன்றின் முதலாவது பெண் பயிற்றுவிப்பாளர் என்ற பெருமை தியூன்மேயர் எனும் ஜேர்மனியப பெண்ணுக்குக் கிடைக்கிறது. (யே)

# விளையாட்டு



**தற்பொழுது பங்களா தேஷ் அணிக்கும் சிம்பாப்வே அணிக்கு மிடையில் நடைபெற்றுவரும் டெஸ் போட்டியில் 10பவுண்டரிகள் 3சிக்சர்கள் அடங்கலாக செஞ்சரியை அண்மிக்கும் பங்களா தேஷ் அணியின் மெஹமட அஸ்ரபுல்லை படத்தில் காண்கிறீர்கள்**

## தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் மூன்றாம் நாள் முடிவுகள்

பெண்களுக்கான கபடிப்போடடியில் முல்லைத்தீவு அணி மன்னார் அணியை 65-21என்ற புள்ளி அடிப்படையில் வென்றது. ஆண்கள் பிரிவில் யாழ்.அணியினர் மட்டக்களப்பு அணியை 42.22 என்ற புள்ளியடிப்படையில் வென றனர். கரப்பந்தாட்டத்தில் மன்னார அணியினர் வவுனியா அணியினரை 2-0என்ற நேர்செற்றிலும் திருகோணமலை அணியினர் முல்லைத்தீவு அணியினரை 2-0என்ற நேர்செற்றிலும் வெற்றியீட்டினர். இதேவேளை கிளித்தட்டு விளையாட்டில் முல்லைத்தீவு அணியினர் வவுனியா அணியினரை 12-11புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டினர்.

**கிரிக்கெற்**

30 ஓவர்கொண்ட கிரிக்கெற் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முல்லைத்தீவு அணியினர் மட்டக்களப்பு அணியினரை துடுப்பெடுத்தாடப் பணித்தனர். 28,3ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும இழந்து 153ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ரூபராஜ் 35ஓட்டங்களையும் மோதிஸ் 27ஓட்டங்களையும பெற்றனர். பந்து வீச்சில் சரவணன், சுபாஷ்கரன் ஆகியோர் தலா 3விக்கெறறுக்களைக்கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு அணியினர் 22,1 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 97ஓடடங்களை மடடுமே பெற்று 56ஓட்டங்களால தோல்வியடைந்தனர். இதில சுபாஷ 47ஓடடங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அருணபிரசாத் 3விக்கெற்றுக்களையும கஜன், ரூபராஜ் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இம் மூன்றாம் நாள் நிகழ்வுகளில் முல்லைத்தீவு, மட்டுநகர் அணிகளுக்கிடையிலான கிரிக்கெற போட்டிகளுக்கு ஜேக்கப், சிவதரன் ஆகியோர் நடுவர்களாகவும் ஸ்ரீதரன 3வது நடுவராகவும் பணியாற்றினர். காலையில் நடந்த ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு மனோகரன, செல்வராசா ஆகியோா நடுவர்களாகப் பணியாற்றினர்.(யே-68)



இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெற் தொடரில் விளையாடப் பாகிஸ்தானின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சாஹிட் அவ்றிடி மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரைவிட பசிட்காண், பயிசல் இக்பால், அஷிம் கமால் சதாப்ஹபீா ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டு இம்மரான் நசீா, நவிட் லத்தீப் ஆகியோர் அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தானின் பயிற்சிகள் இம்மாதம் 24ஆம் திகதி லாகூரில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது.

# தேசிய கனிஷ்ட வலைப்பந்து போட்டித் தொடர் ஆரம்பம்

தேசிய கனிஷ்ட வலைப்பந்தாட்ட போட்டித்தொடர் நேற்றுமுன தினம கொழும்பில் ஆரம்பமாகியுளளது. இதனை இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம் இடைக்கால நிர்வாகசபை ஏற்பாடு செய்துள்ளது. கொழும்பு ரொறிங்ரன் மைதானத்தில் ஆரம்பமான கனிஷ்ட வலைப் பந்தாட்டப் போட்டித் தொடரில் 22 அணிகள் பங்குபற்றியுள்ளன.


ஆறாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் போட்டித தொடரில் இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்துடன் தொடர்புடைய மாவட்ட சங்க அணிகள் கலந்து கொள்கின்றன.

யுலை 19ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ள 2004ஆம் ஆண்டுக்கான ஆசிய கனிஷ்ட வலைப்பந்தாட்ட சம்பியன் சிப் போட்டிககான வீராங்கனைகள் தெரிவுசெய்யபபடவுள்ளதாக வலைப்பந்தாட்ட சம்மேளன இடைக்கால நிர்வாக சபை தெரிவித்துள்ளது. ஆசிய கனிஷ்ட வலைப்பந்தாட்ட நடப் பாண்டுச சம்பியனாக இலங்கை வலைப்பந்தாட்ட அணி இருக்கின்றமை குறிபபிடத்தக்கதாகும். (யே-121)

**தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் முன்னணி அணிகளின் வீரர்கள் பங்குபற்றும் சில காட்சிகளை படங்களில் காண்கிறீர்கள். செல்சியா, ஆஷனல், கன்னஸ், மஞ்செஷ்டர் யூனைட்டட், லீட்ஸ் போன்ற விளையாட்டுக்கழகங்களின் முன்னணி வீரர்களையே படங்களில் காண்கிறீர்கள். இறுதியாக நடந்த போட்டி ஒன்றில் ஆஷனல் கழகம் 2:1என்ற அடிப்படையில் செல்சியா கழகத்தைத் தோற்கடித்து முன்னணியில் திகழ்கிறது.**












# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

54

## இரண்டாம் பகுதி

### புத்தளம் - கற்பிட்டி வழமைகள்

### 1.புத்தளம், கற்பிட்டி ஆகியவற்றிலுள்ள தேசவழமையும் சாதி வழமைகளும்

### 3. முக்குவர் வழமை

முக்குவர் சாதி வழமையிறீ சொத்துகள் முதுசொம், சீதனம், தேட்டம் என்னும் மூன்று வகைக்குரியனவாகும். முதுசொம், சீதனம்,தேட்டம் என்பவற்றோடு கலப் பதில்லலை. ஒருவனுடைய முதுசொம்மான சொத்துகள் எல்லாம் அவனுடைய மக்களுக்கன்றி மருமக்களுக்கே உரியனவாகும். பாரம்பரியமான அரசாங்க பதவிகளும் வரிசை மானியங்களும் மருமக்களின உரிமையாகும்.

கணவன் மனைவி, ஆகியோரின் தேட்டமும் அவளுடைய சீதனமும் பிள்ளைகளின் உரிமையாகும். பிள்ளைகள் இல்லாதிருந்தால் பெண்ணின் சீதனம் அவளின் உறவு முறையாரின் உரிமையாகும். அவர்களின் தேடிய தேட்டம் எல்லாம் சம பங்குகளில் இரு வரினதும் உறவினரைச் சேரும். ஆதனம் உரிமைகள் தவிர்ந்த விடயங்கள் எல்லாவற்றிலும் முக்குவரிடையே காணப் பெற்ற வழமைகள் எல்லாத் தமிழ்ச் சாதியாருக்கும் பொதுவான வையாகும்.

### 4. பரதவர் சாதி வழமை

சொத்துரிமைகளைப் பொறுத்தவரையிற் பரதவர் வழமையிலே சில தனித்துவமான அம்சங்கள் உண்டு. அவை முக்குவரின் வழமையிலிருந்து வேறுபட்டவை. யாழ்ப்பாணத்தவரின் தேசவழமையினைச் சில அம்சங்களில் ஒத்தவை. பாகப்பிரிவினையில் முதுசொம், சீதனம்,தேட்டம் ஆகிய மூன்றும் கலப்பதுண்டு. பிதாமாதா மரணமாகிய பின் பிள்ளைகள் அவர்களுடைய சொத்துக்களைப் பகுந்து கொள்வர்.அவை ஆண் பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் சம பங்குகளிற் கிடைக்கும்.

### சீதனம்

ஒரு பெண்ணைக் கலியாணம் முடித்துக்கொடுக்கும் போது, பெற்றோர் தங்கள் இயல்புக்குத் தக்கவாறு பொருள் பண்டங்களையும், காணி, பூமி, வீடு, தோட்டம் முதலானாதுகளையும் சீதனமாக உறுதி எழுதிக்கொடுப்பார்கள். அப்படியாகக் கலியாணம் முடித்த பெண்களுக்குச் சீதனம் உறுதியிற் சொல்லியபடி கிடைக்கிறதேயல்லாது பாகப்பிரிவினையில் வேறொன்றும் கிடைப்பதில்லை. சீதன உறுதி எழுதாது ஒரு பெண்ணைப் பிதா மாதா கலியாணம் பண்ணிக்கொடுத்தால் அவர்களின் பின் அவர்களுடைய சொத்துகளில் அவளுக்குரிய பங்கு அவளுக்குக்கிடைக்கும்.

பிள்ளையில்லாது மனைவி இறந்து போனால் முதுசொம் முழுவதும் கணவனுக்குரியதாகும். அத்துடன் தேட்டத்திலும், சீதனத்திலும் அரைவாசி அவனது உரிமையாகும் மற்றும் அரைவாசி அவளுடைய பிதா மாதாவுக்குச்சேரும் அவர்கள் இல்லாதவிடத்து அது அவளுடைய சகோதரிக்குச் சேரும். பிள்ளையில்லாது மனைவி இருக்கக் கணவன் இறந்து போனாலும் இதுவே வழமை. சீதனம் முழுவதோடு தேட்டம், முதுசொம் ஆகியவற்றில் அரைவாசி அவளுக்குரியதாகும். மற்றும் அரைவாசி அவளுடைய பிதா மாதாவைச்சேரும்.

கற்பிட்டிப் பரதவர் சாதிவழமைப்படி பிள்ளையில்லாது கணவனும் மனைவியும் இறக்குமிடத்து அவரவர் சொத்துக்கள் மீதான முன்னுரிமை அவரவர் பிதா மாதாக்களுக்குரியவை அவர்களில்லாது போனால் ஆணின் உரிமைகள் ஆண் சகோதரனையும் பெண்ணின் உரிமை சகோதரிகளையுஞ் சேரும் என்பது கவனத்தற்குரியது.

### 2 புத்தள மாவட்டத்துச் சமுதாய நிலைகள்

### (ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்து அதிகாரியின் அறிக்கை ஒன்றில் உள்ள பகுதி)

### சமூகப்பிரிவுகள்

புத்தளம் மாவட்டத்தில் இப்பொழுது வாழுகின்ற மக்கள் மேல்வரும் சாதிகளைச் சேர்ந்தோராவர்: செட்டிகள், வெள்ளாளர், சோனகர், கிறிஸ்தவ முக்குவர், இஸ்லாமிய முக்குவர், இந்துக்களாயுள்ள மீனவர்,இஸ்லாமிய மீனவர், கட்டைக்காட்டில் வாழுகின்ற கிறிஸ்தவரான வாகை(யர்), சாயவேர் கிளறும் கடையர், கிறிஸ்தவரானவண்ணார், இந்துக்காளான வண்ணார், பூகோளத்தில் வாழும் பரவர், இராசவன்னிபத்து,குமாரவன்னிபத்து ஆகியவற்றில் வாழும் முன்னாலே சொல்லப்பட்ட சாதியார்,சிங்களவர்.

### சோனகர்

புத்தளத்தில் வாழும் இச்சாதியாரின் இயல்புகள், சமயாசாரங்கள், தொழில்கள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை வர்ணிக்குமிடத்து, ஏனைய எல்லாச் சாதியாரைக்காட்டிலுஞ் சோனகர் அதிகமாக உள்ளதால் முதலில் அவர்களைப்பற்றிக் கூறுவேன். சோனகர் என்று எம்மால் வர்ணிக்கப்படுவோர் சுன்னிப்பிரிவைச் சேர்ந்த முகமதியர்களாவர், அல்குரானில் அடங்கிய கோட்பாடுகளையும் மார்க்கத்தையும் அவர்கள் பின்பற்றுகின்றனர். அத்துடன் அவர்கள் சில இந்து வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டுள்ளனர்.

அவர்களுடைய வழிபாடு, சட்டங்கள் என்பன சம்பந்தமாகத் தனியான நூலொன்றுண்டு. அதன் விதிகளுக்கமையவே சமயம், கலியாணம்,விவாகரத்து, விபசாரம், சொத்துரிமை போன்றன பற்றிய அவர்களின் வழக்குகள் தீர்க்கப்படும்.

சோனகர் இயல்பாகவே தற்பெருமை கொண்டவர்கள்; குள்ளமானவர்கள்; அவர்களுக்கு வியாபாரமே தொழிலாகும் அவர்கள் அதிக புத்தியோடும் ஊக்கத்தோடும் வியாபாரஞ் செய்கின்றனர். ஐரோப்பாவில் உள்ள யூதர்களைப்போல இந்தியாவில் அவர்கள் எங்கும் பிரயாணஞ் செய்கின்றனர்.

### விவாகம்

கலியாணம் பற்றி அவர்களிடையே வரையறையான கட்டுப்பாடுகள் இன்மையால் அவர்களுக்குச் சில சுதந்திரங்கள் உண்டு. ஒருவன் மூன்று பெண்களைக் கலியாணம் பண்ணிக்கொண்டு ஏககாலத்தில் அவர்களை மனைவிமாராகக் கொண்டிருக்கலாம். அதனாற் பெண்களும் சுதந்திரமான முறையில் நடந்து கொள்வதற்குத் துணிவு பெறுகின்றனர். தகப்பனொருவன் தனது மகளுக்கு கலியாணஞ் செய்ய வேண்டுமாயின் அவன் அவளுக்குத் தகைமையான மாப்பிள்ளையின் தகப்பனோடு சீதனம் பற்றி ஒரு உடன்பாட்டுக்கு வருவான். அதன்பின் மௌலவியினதும் நான்கு சாட்சிக்காரதும் முன்னிலையிற் கலியாணம் எழுதப்படும். பெண்ணைக் கைவிடும் இடத்து மாப்பிள்ளையானவன் சீதனத்தோடு பெண்ணுடைய மகரையுங் கொடுக்கவேண்டும் என்று கலியாணப்பத்திரத்திலே சொல்லப்பட்டிருக்கும். எழுதி முடித்ததும் பெண்ணின் சார்பிலே கொடுக்கப்படும் கலியாண மோதிரத்தை மாப்பிள்ளை பெற்றுக் கொள்ளுவான் அதன் பின்னர் அவர்களுடைய வழமைகளுக்கு ஏற்பக் கலியாண வைபவம் நடைபெறும்.

(தொடரும்)







அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற சுகாதாரக்கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனின் "சுக வாழ்க்கை பாகம் II"நூல் வெளியீட்டு விழாவில் இளைப் பாறிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத் திய கலாநிதி வி.ஜெகநாதன் தலைமையுரை ஆற்றுவதையும்,

இந்நிகழ்வில் பங்குகொண்ட நூலாசிரியர், ஜயவர்த் தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியகலாநிதி எஸ்.சிவயோகன், தமிழ்ச்சங்கச் செயலர் ஆ.கந்தசாமி மற்றும் கலை இலக்கியப் பேரவை யின் இணைப்பாளர் சோ.தேவராஜா ஆகியோரையும்,

இதில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## படையினரும் பொலிஸாரும் மக்களின் இயல்பு வாழ்வைக் குழப்பக்கூடாது

## கிராம உத்தியோகத்தர்கள் மகஜர்

பொதுமக்களின் இயல்பு வாழ்வைக் குழப்பும் விதமாகப் படையினரும், பொலிஸாரும் மேற்கொண்டு வரும் விபரம சேகரிப்பு நடவடிக்கைகள் நிறுத தப்படவேண்டும் எனக் கோரி வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சங்கம் உளளூராட்சி மாகாணசபை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழும் வாழ்ந்து வரும் பொது மக்களின் விபரங்களை சேகரித்துத் தருமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிராம உத்தியோகத்தர்களிடமும் படையினரும் பொலிஸாரும் வலியுறுத்தி வருகின்றனர்.

அரசு-புலிகள் தரப்புகளிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இவ்விபரச் சேகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதனால, சமாதானச் சூழ்நிலையிலும் மக்கள் பீதியடைந்துள்ளனர். எனவே, இதனை உடனடியாக நிறுத்துவதற்குரிய நடவடிககைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், யாழ். மாவட்டக்

வாரத்தில் 6 நாட்கள் அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும் என நிபந்தனையொன்று விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் இது நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றபோதிலும் அது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

அத்துடன் 1990ஆம் ஆண்டிற்குப் பின் யுத்தம் காரணமாக ஏற்பட்ட இழப்புகளுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இவற்றால் தாம் வெகுவாகப் பாதிககப்பட்டிருப்பதாகவும் மேலும் சுட்டிககாட்டப்பட்டுள்ளது. (யே-4)

### மூளாய்ச் சந்தி இருளில்!

மூளாய் சந்தியிலிருந்து பொன்னாலை கிருஷ்ணன் கோவில் வரையான வீதியில் மின்விளக்குகள் எதுவும் பொருத்தப்படாத நிலையில் அவ்வீதி இருளில் மூழ்கியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு சிலவருடங்கள் கழிந்தபோதிலும் கூட அவ்வீதிக்கு மின்சாரசபை மின்விளக்குகள் பொருத்தாது இருப்பதனால் இரவு வேளையில் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகாயங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (யே-50)

## ரணில்-ஹக்கீம் இடையே இரு சுற்றுப் பேச்சுக்கள்முடிவு

(கொழும்பு)

தேர்தல் வேட்பாளர் தெரிவிற்கு இன்னமும் சில நாட்களே இருக்கின்ற நிலையில் பிரதமர் ரணிலிறகும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளின் போது தமது கட்சி 10 செயற திட்டங்களை முன்வைத்திருப்பதாகவும், இதன் அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் தேர்தல் கூட்டு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து தாம் நம்பிக்கையுடன் உள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கட்சியாக உள்ளமையால், அங்கே முஸ்லிம்கள் சார்பாக எவரையும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடச் செய்யக் கூடாது என பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த முஸ்லிம் வேட்பாளர்களில் தலா ஒருவரை சகல மாவட்டங்களிலும் முஸ்லிம் காங்கிரஸின் கீழ் போட்டியிட வைப்பதற்கான கோரிக்கையும் பிரதமரிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (யே-18)

## தீ விபத்து

(கொழும்பு)

சிலாபம் மாதம்பை பிரதேசத்தில் இடம்பெற்ற தீவிபத்தொன்றில் வர்த்தக ஏற்றுமதி நிறுவனமொன்று முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம பெற்ற இத் தீவிபத்து சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படாத போதிலும் பல பில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயினால் முற்றாக சேதமடைந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தும்பு உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் இந்நிறுவனத்தில் தீவிபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவ தாகவும் மாதம்பைப் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (யே-61,10)

## சிறுவர் போஷாக்கு விடயத்தில் பெற்றோரின் பங்கு அவசியம்

### சுகாதார வைத்திய அதிகாரி

(சுதுமலை)

சிறுவர்களின் போஷாக்கை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்கு மிகவும் அத்தியாவசியமானது. இவ்வாறு மானிப்பாய் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா தெரிவித்தார்.

சாவல்கட்டு கிராமத்தில் உள்ள 100வீட்டுத்திட்ட கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் சிறுவர்களின் வளர்ச்சி, விருத்தி தொடர்பான 3 நாள் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த வியாழன முதல் நடைபெற்றது. இறுதிநாள் நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது,

மானிப்பாய் சுகாதாரப் பிரதேச சனத்தொகையின் ஆயவுகளின் பிரகாரம் ஒருவயதிற்குட்பட்ட சிறுவர்களின் போஷாக்கு நிலை உயர்வாக உள்ளது. இரண்டு வயது முதல் போஷாக்கு வீழ்ச்சியடைந்து 3 தொடக்கம் 5வயது காலப்பகுதியில் மிகவும் வீழ்ச்சியடைகின்றமை கண்டறியப்படடுள்ளது. இக் காலப்பகுதியில் போஷாக்கு வீழ்ச்சியடைவதால் தொற்றுநோய்கள் ஏற்படுகின்றன. மூன்று வயது தொடக்கம் 5வயதிற்குட்பட்ட காலப்பகுதியில் மூளைவளர்ச்சி அடைவதால் கட்டாயம் போஷாக்கு அவசியம். பெற்றோர்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருப்பதன் முக்கியத்துவத்தையும் இவ் வயதுகளில் தினமும் 5தடவைகள் ஆவது சிறார்களுக்கு உணவு ஊட்டுவது அவசியம்.

மேலும் பெற்றோர்கள் தினமும் சிறிதுநேரம் ஒதுக்கி சிறுவர்களுடன் உரையாடுதல் வேண்டும் எனவும் அவர்களது விருப்பு வெறுப்புகளில் பங்குபற்றவேண்டும். மேலும் பெற்றோர்களை கனம் பண்ணுதல், வீடடிற்கு வரும் விருந்தினரை வரவேற்றல், மற்றவர்களுடன் சேர்ந்து பழகுதல், வெளியிடங்கள், விளையாட்டு இடங்களுக்கு கூட்டிச் செல்லுதல் போன்றவை பிள்ளைகளின் வளர்ச்சி உணர்வை தூண்டும் செயற்பாடுகள் எனவும் இதன்மூலம் சமூகச் சூழலுடன் பிள்ளை ஒன்றிணைய வாய்ப்பு ஏற்படும் எனவும் வலியுறுத்தினார்.

சுகாதார அமைச்சினால் ஒவ்வோர் சிகிச்சை நிலையங்களிலும் சிறுவர்களினதும், தாய்மார்களினதும் போஷாக்கை மேம்படுத்தும் நோக்கில் சோயாமா,முக்கூட்டுமா மற்றும் அயன் விற்றமின் மாத்திரைகள் ஒவ்வோர் மாதமும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனை உரிய முறையில் பயன்படுத்துவதன மூலம் இலகுவாக போஷாக்கை மேம்படுத்த முடியும் எனவும் இவை மூலம் விஷேடமாக தயாரிக்கக் கூடிய உணவு வகைகள் பற்றியும் தெளிவாக விளக்கினார்.(யே-252)

## அணு ஆயுத விற்பனையில் ஈடுபட்ட இலங்கையர் மலேசியாவில் கைது

(கொழும்பு)

பாகிஸ்தானின் அணுத்திட்ட தந்தையான அப்துல் கதிர்கானுடன் 1994ஆம் ஆண்டில் இருந்து தனக்கு தொடர்பு இருந்தது என இலங்கை வர்த்தகர் மலேசியப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதத் தொழில் நுட்பங்களை வேற்று நாடுகளுககு சட்டவிரோதமாக விற்பனை செய்து வந்த அப்துல் கதிர்கானுக்கு இலங்கையைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் உதவி வருவதாகவும் அவர் மலேசியப் பிரதமரின் மகனுடனும் தொடர்புடையவர் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபுள்யூ புஷ் அமெரிக்க ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பான விசாரணைகளை உடன் மேற்கொள்ளுமாறு மலேசியப் பிரதமர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதற்கமைய மலேசியப் பொலிஸார் சநதேகத்தின் பேரில் இலங்கை வர்த்தகர் ஒருவரை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனா.

விசாரணைகளின் போது "1994ம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து ஈரானுக்கு 2கொள்கலன்களில் அணுவாயுதங்களை அனுப்புவதற்கு உதவுமாறு பாகிஸ்தானின் அணுத்திட்டத்தை என்னிடம் கோரியிருந்தார்".

"அதற்கமைய அணுவாயுதங்கள் கொண்ட 2 கொள்கலன்களை டுபாய் ஊடாக ஈரானுக்கு அனுப்பி வைக்க உதவினேன்" என இலங்கை வர்த்தகர் மலேசியப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளாா.

இதேவேளை அணுவாயுத் விற்பனையில் ஈடுபட்டுவந்தவர் எனக் கூறப்படும் இலங்கை வர்த்தகர் தொடர்பான விசாரணைகளை இலங்கைப் பொலிஸாரும் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-61,10)





## சமாதானம் நடைமுறையில் இல்லை என்ற ஜனாதிபதியின் கூற்றுத் தவறானது

### ம.மா.சபை உறுப்பினர் கண்டனம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது சமாதானம் நடைமுறையில் இல்லாதிருப்பதுடன், போர்நிறுத்தமே கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட கருத்தானது, எதுவித அடிப்படையும் அற்றதென மத்திய மாகாண சபை உறுப்பினரும்,தேசிய தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான எஸ்.ஏ.கந்தசாமி கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் மேற்படி கூற்றுத் தொடர்பாக எஸ்.ஏ. கந்தசாமி நேறறு முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள போர் நிறுத்தமானது, நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு மிகவும் சாதகமான ஓர் அடிப்படை விடயமாகும்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கையால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், பெருமளவு வழங்களும் சேதத்திறகுள்ளாகி அழிவடைநதுள்ளன. இவற்றை மீளப் புனரமைப்புச் செய்யவும், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேன் நிலைக்கு அபிவிருத்தியடையச் செய்யவும் பெருமளவு நிதி தேவைப்பட்டது.

இந்நிலையில், ரணில் அரசாங்கத்திற்கும்-விடுதலைப்புலிகளுக்கும இடையில் போர் நிறுத்த புரிந்துணர்வு உடனபடிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நாட்டில் நிலவிய சுமுகமான நிலைமையினை அடுத்தே, இலங்கைக்கு சர்வதேச உதவிகள் அதிகளவில் கிடைத்துவந்தன.

சர்வதேச நாடுகளின் இவ் உதவிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்கு உதவியாக இருந்தன. இவை எல்லாவற்றிற்கும் இங்கு நிரநதர சமாதானத்திற்கான போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருவதே காரணமாகும்.

தற்போதைய போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர், நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காக போர்புரியும் செயறறிடடம் எதுவும் வெற்றியளிக்கவில்லை எனவே, நிரந்தர சமாதானத்திற்கு போர்நிறுத்த உடன்படிக்கை மிகவும் சாதகமான தொன்று. இதில் மறுப்பதற்கு எதுவும் இல்லை என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (யே-18)

## கிளிநொச்சியில் விசர்நாய்கள்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விசர்நாய்க்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

அந்த அடிபபடையில் இம் மாத ஆரம்பத்தில் இருந்து நேற்றவரை 45பேர் விசர்நாயக்கடிக்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளதாக வைத்தியசாலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான விசர்நாய்கள் கிளிநொச்சி நகரப்பகுதியில் நாளுககு நாள் அதிகரித்துவருவதாக விசனம் தெரிவிக்கின்றனர். (யே-64,4)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புனித மரியாயின் சேனை பரலோக மாதா பிரசீடியத்தின் வழிகாட்டிகளாக புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகராக பங்குத் தந்தை அருட்திரு எ.ஞானப்பிரகாசம் அடிகளாரும், தலைவராக சகோதரி மரியராக்கினியும், உப-தலைவராக தே.யேசுதாசனும், பொருளாளராக எஸ்.கிளேசியாவும் தெரிவு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு வாக்களியுங்கள்

### ம.ம.சம்மேளனம் வேண்டுகோள்

(கொழும்பு)

வவுனியா மக்கள் மன்ற சம்மேளனம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு வாக்களிக்குமாறு பொது மக்களைக் கேட்டுள்ளது.

மக்கள் மனற சம்மேளனம் இது தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்மக்களுக்கு உசசக் கடப பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெறுவதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கூட்டமைப்பின் கொள்கைகள் பிரதிபலிக்கின்றதெனபதை சர்வதேச சமூகத்திற்கு

டமைப்பின் கொள்கைகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் இதன் மூலம் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணமுடியும் என்பதை உறுதியாகக் கூறமுடியும.

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த தென்னிலங்கை (சிங்கள) அரசியல் வாதிகளுக்கு தமிழ்பேசும் மக்கள் வாக்களிக்கக்கூடாது.

மாறாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குத் தமது வாக்குகளை வழங்கி (தமிழ் மக்களின்) பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சகல மக்களும் உதவ வேண்டும் எனவுழ மக்கள் மன்ற சம்மேளனம் கேட் (யே-60,10)



யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் ஆண்டுப் பூர்த்தியை யொட்டி யாழ்.மாவட்ட மனிநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு அதிகாரிகளைச் சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்து உரையாடிபோது எடுத்த படங்கள். (படங்கள்:ஐங்கரன்)

# பல்கலைக்கழக அனுமதி முறையும்

**மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்**
**ஆசிரியர்களா?**
**மாணவர்களா?**
**பெற்றோர்களா?**

*இவ்விவாத அரங்கில் கல்வி வீழ்ச்சிக்கான புறக்காரணிகளும் இங்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றது.*

## பொருத்தமில்லாத கல்வித் திட்டமுமே

## கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்

**விவாத அரங்கு**

யாழ். குடாநாட்டின் கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களை மிகவும் பரந்துபட்ட தளங்களில் இருந்து ஆய்வு செய்வதே சாலப் பொருத்தமானதாகும். இருந்தும் தங்களின் விவாத அரங்கிற்கு அமைவாகவே ஆய்வு செய்கிறேன். அண்மையில் கல்வி அமைச்சர் விடுத்த அறிக்கையின் பிரகாரம் முப்பது சதவீதத்திற்கும் குறைவான மாணவர்களே கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். இது இலங்கையின் க.பொ.த. சாதாரணப் பரீட்சையின் விபரம். ஆனால் யாழ்ப்பாணம் பல எதிர் நீச்சலுக்கு மத்தியிலும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருந்தாலும் இப்போது மிகப் பின்னடைவைச் சந்தித்துப் போனதன் அடித்தளங்களை ஆராய்வது பொருத்தமானதே.

" ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்ற பழமொழி இன்று நேற்று இயற்றப்பட்டதல்ல. எமது நாட்டின் இன்றைய சீர்கேட்டுக்கும் ஓர் காரணம்; எம் கல்வித் திட்டத்தினால் பல ஏட்டுச் சுரைக்காய்களை வரையறையின்றி உற்பத்தி செய்து பவுத்திரப் படுத்திக் கொண்டதுதான். இத் தொடர்களின் விளைவுதான் இன்றைய கல்வி வீழ்ச்சியின் அடித்தளம்.

நாட்டுக்கும், அதன் மக்களுக்கும் உபயோகமற்ற கல்வி எதற்காக? நாட்டின் பெரும் நிதி வளம் கல்விக்காக செலவு செய்யப்பட்டு வருகின்ற போதிலும் இதன் பிரதி பலன்கள் என்ன? பல நூறு கோடி ரூபாய்களை 3 வீத மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் வைத்து செலவு செய்து பெற்ற பலன்; அவர்களின் சுய நலன்களை பாதுகாத்துக் கொடுப்பதுடன் முடக்கப்படுகிறது.

மிகக் குறைந்த வீதத்தினர் மட்டும் உயர் கல்விக்கு உள்வாங்கப்படுவதனால், அனேக மாணவர்கள் இம் முயற்சிக்கு முகம் கொடுக்கப் பணம், குடும்ப நிலை, வயது (காலம்) இப்படிப் பல பிரச்சினைகளை ஒப்பு நோக்கி கல்வியில் இருந்தும் பின் வாங்கி விடுகிறார்கள்.

மண்ணுக்கும், மக்களுக்கும், பொருத்தமில்லா கல்வியைக் கற்ற பட்டதாரிகள் மக்களுக்கு சீரான பதில் சொல்ல முடியாது போகலாம என எண்ணி இந்த நாட்டையே விட்டு ஓடி வேறுநாட்டில் தலைமறைவாகி விடுகிறார்கள். உயர் கல்விகளை கற்றவர்கள் மட்டும் நாட்டைவிட்டு ஓடவில்லை.

சாதாரண கல்வியுடன் படிப்பை நிறுத்திவிட்டு வெளிநாடுகளில் வேண்டிய பணம் சம்பாதிக்கிறார்கள். படித்தவர்களும், படிக்காதவர்களும் கூடி தரவேறுபாடின்றி ஒரே தொழிலைச் செய்கிறார்கள். இந் நிலையில் கல்வித் தரம் உயர வேண்டும் என்ற தூண்டல் மாணவர்களுக்கு இல்லாது போகிறது.

யாழ்ப்பாணக் கல்வித்தரம் மேலும் வீழ்ச்சி அடைவதற்குப் பல்கலைக்கழக அனுமதிகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. கலைப்பீடங்களுக்கு புதிய புதிய கற்கை நெறிகளை உருவாக்கி, அதிக தொகை மாணவர்களை உள்வாங்கும் பல்கலைக்கழகம், விஞ்ஞானத்துறையில் மிகக் குறைந்த மாணவர்களையே உள்வாங்கிக் கொண்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டின் காலப் பகுதியில் 70 க்கும் அதிகமான மருத்துவ மாணவர்களை உள்வாங்கிய யாழ். பல்கலைக் கழகத்தில் இவ்வெண்ணிக்கை வருடா வருடம் குறைந்து 2002 ஆம் ஆண்டில் சுமார் 30 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பொறியியல் துறையிலும் இதனை விடவும் மோசமான நிலையே தொடர்கிறது. பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானபீட மாணவர்களின் தொகையை அதிகரிப்பதன் மூலமும் புதிய கற்கை நெறிகளை உருவாக்குவதன் மூலமும் மாணவர்களின் கல்வி ஆர்வம் ஊக்குவிக்கப்படலாம்.

மிக முக்கியமான விடயம்; ஒவ்வொரு மாணவனின் தனி ஆற்றல்களை, திறமைகளை கல்வித் திட்டத்தினால் கண்டறிய முடியாதுள்ளது. பல அறிஞர்கள் பல வருடங்களின் முன் இதனை இனம் கண்டறிந்தபோதும் ஏன் சீர் செய்ய முடியவில்லை. ஒவ்வொரு மாணவரின் தன் இயல்புகளை கல்வி மூலம் கண்டறியப்படுமானால் அவர்களை சமூகத்தின் முக்கிய பொறுப்புக்களில் ஏன் அமர்த்த முடியாது.

அவர்களிடம் தாம் வரலாற்றின் பொறுப்புள்ள பிரஜைகள் என்பதன் நம்பிக்கையை ஏன் ஊட்டக் கூடாது. நிலைமை இப்படி அமையுமாக இருந்தால் சமுதாயம் தன்னுடையது என்பதை அவர்கள் ஏன் நம்ப மாட்டார்கள். இங்கே இருந்துதான் கல்வியின் மகத்துவம் மாணவர்களின் அறிவாற்றலுக்கமைய உணரப்படும். கல்வியை தமக்கும், தமது தேசத்துக்குமாக துருவித்துருவி ஆராயத் தொடங்குவார்கள்.

காலாதி காலமாக வெள்ளைக்காரரை திருப்திப்படுத்தியே எமது வாழ்வை ஓட்டவேண்டிய துர்ப்பாக்கியத்தில் இருந்து வருகிறோம். இன்று நாம் எமக்காக இயற்கை மீது கண்டறியப்பட வேண்டிய-கூர்மைப்படுத்த வேண்டிய அறிவுகளை மழுங்கடித்து விட்டோம் இதனால் அறிவியலுக்கான பிற்புலத்தளங்களை காட்சிப்படுத்த முடியாது உள்ளது.

மாணவர் பெறுகின்ற கல்வியை நடைமுறையில் காட்சிப்படுத்தி, பயிற்சி கொடுத்து அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர கல்வியில் திட்டங்கள் இல்லை. விருத்தி செய்யும் தளங்கள் இல்லை. அடிக்கடி கல்வி அதிகாரிகளினால் மாற்றியமைக்கப்படும் கல்வி முறைகளினால் ஆசிரியர்கள் படாப்பாடுபட்டு சலித்து விடுகிறார்கள். அதிகாரிகளால் அடிக்கடி மாற்றி அமைத்துக் கொள்ளும் ஞான உபதேசங்களை கேட்பதற்கு பயிற்சி வகுப்புக்களில் தமது மணித்தியாலங்களைக் கழித்து வருகின்றனர்.

அடிக்கடி மாறும் உபதேசங்களும் பயிற்சிகளும் மாணவர்களின் குறிதவறும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதிகாரிகள் ஆசிரியர்களையும், ஆசிரியர்கள் மாணவர்களையும் பரிசோதனைப் பொருட்களாகக் கருதி வாய்ப்புக்கள் பார்க்கிறார்களே தவிர, மாணவர்களின் தனி இயல்புகள் விருத்தி செய்வதற்கு கல்வி உபயோகப்படாதுள்ளது. நீண்ட கால வேலைத் திட்டங்களை வகுப்பதில்லை.

மாணவரின் மனனத் திறமையைச் சோதித்துப பார்ப்பதுடன் எமது கல்வித் தேவை முடிக்கப்படுகிறது. பரீட்சையுடன் மாணவர்களும் தமது மனனத்தை பதிவு செய்வதுடன் கல்வியையும் முடித்து விட்டு சான்றிதழ்களைப் பெறுகிறார்கள். இவைதான் இன்றும் நடைபெறுகிறது.

மிக அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய விரிவுரையாளர் ஒருவர் கூறும் போது மாணவர்கள் பலரின் பயங்கரநிலை பற்றி தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டார். 6ம் 7ம் ஆண்டு கல்வி அறிவு இல்லாதவர்கள் எப்படி பல்கலைக்கழகங்களில் கல்வியைப் பூர்த்தி செய்ய முடியும் என குறைபட்டுக்கொண்டார்.

எது எப்படி இருந்த பொழுதிலும் உலக முறைமைகளினால் அப்பாவிகளாகவும், குற்றவாளிகளாகவும் போல் ஆக்கப்பட்டுள்ள பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் குறை கூறிப் பலனேதும் இல்லை. மாறாக உலக முறைமைகளுக்கேற்றவாறு; நவீன தொழில்நுட்ப உற்பத்திகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய திறன் மிக்க கல்வித் திட்டங்களை அமுல் படுத்த வேண்டியதே யாழ். மாணவர்களைக் கல்வி வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றக் கூடிய பணியாகும். நம்பிக்கை இழந்து போயுள்ள கல்விக் கொள்கையில் மாணவர்களைப் புத்தூக்கம் கொடுக்கும் வகையில் கல்வி மறுசீரமைக்கப்படவேண்டியது வரலாற்று தேவையாகும்.

நா. விஸ்வலிங்கம்
அரசடிலேன்,
நவாலி தெற்கு.

---

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பாடத்தெரிவு வழிகாட்டல் கருத்தரங்கு இன்று கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

இதற்கமைய கரவெட்டிக் கோடடப் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு யா/ நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலும், பருத்தித்துறை கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு யா/ வடஇந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

(ந-8)

## பேரவை உறுப்பினர்கள் கூட்டம் இன்று

(கோப்பாய்)

வலி. கிழக்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், ஊரக பேரவை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கான கூட்ட நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அரசியல் துறைப் பொறுப்பாளர் து.கிரி கேட்டுள்ளார். (ந-79)

## தேர்தல் ஆணையாளர் வேட்பாளர்களைச் சந்திப்பார்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுடனான விசேட சந்திப்புக்களை தனித்தனியே நடத்தவுள்ளார்.

தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்து முடித்தபின் இச் சந்திப்புக்களை நடத்துவார்.

வன்முறைகள் அற்ற தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஒத்துழைப்பு வேண்டியும், தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் எதிர் கொள்ளும் அச்சுறுத்தல்கள் , பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன் போது ஆராயப்படும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 2ஆம் திகதி வரையான காலத்தில் பிரதி வெள்ளி தோறும் கொழும்பு இராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் இச்சந்திப்புக்கள் நடைபெறும்.

இதேவேளை, மாவட்ட தேர்தல் ஆணையாளர்களும் தெரிவு அத்தாட்சி அலுவலர்களும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள உத்தியோத்தர்களைத் தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (யே-60,4)

### வாக்குச்சீட்டு அச்சேற்றம்

ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வகைக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை முதல் ஆரம்பமாக இருப்பதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனுகள் தாக்கல் செய்யப்பட்டபின், இரகசியமான அடையாளங்களுடன் வாக்குச்சீட்டகள் அச்சடிக்கும் பணி ஆரம்பமாகும் என்றும், இதற்காக 80 தொன கடதாசி பிரித்தானியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (யே-பு)

## தேர்தலைக் கண்காணிக்க சுதந்திர அமைப்பு உருவாகும்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலக் குழறுபடிகளைக் கண்காணிப்பதற்கு என தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மேற்கொள்ளப்படும் வாக்கெடுப்புக்களின் போது ஏற்படும் மோசடிச் செயல்களை இக்குழு கண்காணிக்கும். இதற்கென செயற் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும்.

நடுநிலையாக செயற்படவுள்ள இக்குழுவில் அரசியல் சார்பற்ற பணியாளர்கள் கடமையாற்றுவர். இதற்கென நிர்வாக, சட்ட, பல்கலைக் கழகம் ஆகிய துறைகளை சார்ந்த ஊழியர்கள் பணியிலீடுபடுத்தப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

இதன் தலைமைச் செயலகம் கொழும்பு ராஜகிரியாவில் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(யே-4,60)

## கண்டி-நுவரெலியா பகுதிகளில் இ.தொ.கா தனித்துப் போட்டி?

(பதுளை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவது எனத் தீர்மானித்துள்ளது.

ஐக்கியதேசிய முன்னணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தொழிலாளர் காங்கிரஸின் சார்பாக சட்டத்தரணி பைஸார் முஸ்தப்பானு சேர்த்துக்கொள்வதற்கான வேண்டுகோளை ஐக்கியதேசிய முன்னணி நிராகரித்துள்ளது. இதனால், காங்கிரஸ் இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

உடத்தலவின்ன படுகொலை மற்றும் முஸ்லிம் சமூக விரோதச் செயல்களிலும் முஸ்தப்பா சம்பந்தப்பட்டுள்ளார். இதனால், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கியதேசிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இவர் பெயரை இணைப்பது குறித்துப் பல எதிர்ப்புக்களை காட்டிவந்துள்ளார். இதன் காரணமாக இவர் பெயரை ஐக்கிய தேசிய முன்னணி தன் வேட்பாளர் பட்டியில் இருந்து நீக்கியுள்ளமையால் தொழிலாளர் காங்கிரஸ் இம்முடிவிற்கு வந்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியும் சுயேட்சையாகப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகிறது.

(யே-60,4)

# அரச ஊடகங்களைப் பொறுப்பேற்க தேர்தல் ஆணையாளருக்கு இடமுண்டு

## மனித உரிமைகள் மற்றும் சட்ட நிறுவனம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையின் 17ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ அரச ஊடகங்களைத் தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்கமுடியும் என மனித உரிமைகள் மற்றும் சட்டநிறுவனம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.**

**ஹொங்கொங்கைத் தலைமையாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படும் கொழும்பு நிறுவனமான சட்டத்தின் ஆட்சிமையம் என்னும் நிறுவனமே இது தொடர்பாக விரிவான விளக்கம் ஒன்றை வழங்கியுள்ளது.**

ஊடகவியலாளர் மாநாட்டை யொட்டி கடந்த வியாழக்கிழமை நடத்திய தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் விவகாரங்களைக் கையாளும் விடயத்தில் தமக்கிருந்த அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டவை எனக் கவலை தெரிவித்திருந்தார்.

அத்துடன், அரச ஊடகங்கள் விவகாரத்தில் தம்மால் ஆலோசனைகளை மட்டுமே வழங்க முடியும் என்றும், அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்குக் கிடையாது என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அவரது இக்கருத்தை மறுத்துரைத்துள்ள 'சட்டத்தின் ஆட்சி மையம்' என்ற நிறுவனம் 17ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அரச ஊடகங்களான இலங்கை ஒலிபரப்புக கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு விசேட அதிகாரி ஒருவரை அவர் நியமிக்க முடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமுல்படுத்தப்பட்ட 17ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நீதியான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அரச ஊடகங்கள் செயல் படுகின்றனவா? என்பதை இவ்வதிகாரி மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும் முடியும்.

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களான இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் என்பன தேர்தல் முறைகேடுகளுக்கு வழிவகுக்கின்றதா? என்பதையும் இவ்வதிகாரி கண்காணிக்க முடியும் எனவும், இது குறித்து ஊடகத்துறை அமைச்சருக்கும் அவர் ஆலோசனை வழங்கமுடியும் எனவும் இவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, தேர்தல் ஆணையாளர் கடந்த வியாழக்கிழமை தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என தேர்தல கண்காணிப்புக் குழுக்கள் அவரைக் கோரவுள்ளதாகவும் வரி செலுததும் மக்களுடைய உடமைகளான 'தேசிய சொத்துக்களை' எந்தவொரு கட்சியும் தவறாகப் பயன்படுத்தாதிருப்பதை அவர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும், 'சட்டத்தின் ஆட்சி மையம்' என்னும் அந்த நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

(ந-18)

## அரச ஊடகங்கள் இப்போது கட்சிச் சார்பை கைவிட்டுள்ளன

### முன்னாள் அமைச்சர், கருத்து

(கொழும்பு)

அரச ஊடகங்களில் கடைப் பிடிக்கப்பட்டுவந்த கட்சிசார்பான கொள்கைகள் தற்பொழுது கை விடப்பட்டுவிட்டன என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சேனரத் ஹப்புக்கொட்டுவ தற்போதைய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமருக்கு அரச ஊடகங்கள் தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் அதில் அரச ஊடகங்கள் கட்சிச்சார்பாகச் செயற்படுவதுடன், தாம் ஆதரிக்கும் கட்சிகளின் பிரசாரங்களிலும் ஈடுபடுகின்றன. இது தொடர்பாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறும் கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே இக்கருத்தை மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி அரச ஊடகங்களுக்குப் பொறுப்பாக இருந்தபோது ஜனாதிபதியின் கருத்துக்களை அவை இருட்டடிப்புச் செய்துள்ளன. ஆனால், தற்பொழுது அவ்வாறு செய்யப் படுவதில்லை எனவும், இவ்விடயத்தைக் கருத்தில் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-60,4)


இறையாசி பெற ஓர் அரிய வாய்ப்பு!

இயேசு அழைக்கிறார்

**யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா**

பிப்ரவரி 2004

25 முதல் 29 வரை

புதன் முதல் ஞாயிறு முடிய

தினமும் மாலை 4.30 மணிக்கு

இடம் :

செல்லமுத்து மைதானம்,

மணிப்பாய்.

அருளுரை, பிரார்த்தனை வழங்குபவர்கள்

Dr. டி.ஜி.எஸ். தினகரன்

Dr. பால் தினகரன்

Dr. ஸ்டெல்லா தினகரன்

சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்

அனுமதி இலவசம்!



பயிற்சி கூட்டங்கள்

(ஆழமான ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிக்க)

பிப்ரவரி 26 முதல் 28 வரை

காலை 8.30 மணிக்கு

இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

(மணிப்பாய் பிரதேச சபை கலாச்சர மண்டபம், மணிப்பாய்)

இறைபக்தியில், நம்பிக்கையில்,
ஆன்மீக வாழ்வில் எழுச்சிப் பெற,
அன்றாட வாழ்வில் பிரச்சினைகள், துக்கங்கள்,
சரீர நோய்கள் இவற்றிலிருந்து
இறையருளால் விடுதலை பெற
சிறப்புப் பிரார்த்தனைகள்
ஏறெடுக்கப்படும்.



தலைமை ஒருங்கிணைப்பாளர் : பாஸ்டர் சாம் ராஜசூரியர்
மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணம் பிரார்த்தனை திருவிழா அலுவலகம்,
சங்கரபிள்ளை ரோடு, மணிப்பாய், யாழ்ப்பாணம்.
☎ : 021-222-3204, 021-222-2659 மொபைல்.: 0777174500

மும்பை (இந்தியா) நகரில் பிரார்த்தனை விழாவில் திரண்டிருந்த மக்கள் திரளின் ஒரு பகுதி!




கலந்து கொள்பவர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்

# பிரிட்டனில் 2005 ஆம் ஆண்டு முற்பகுதியில் பொதுத் தேர்தல்

## பிளேயர் அறிவிப்பு

(லண்டன்)

பிரிட்டனில் கொன்சர்வேற்றிவ் கட்சியின் எதிர்ப்பு, ஈராக்கிய யுத்தம் சம்பந்தமாக மக்கள் மத்தியில் அதிருப்தி என்பன ஏற்பட்டுள்ள போதிலும், பிரதமர் ரொனப் பிளேயர் மூன்றாவது தடவையும் பிரதமர் பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தை அமைப்பதற்கென தொழிற்கட்சி உறுதியாகச் செயற்படும் என அவர் கூறினார்.

பிரிட்டனில் பிரதம மந்திரியாக நீண்ட காலம் பதவி வகித்து வரும் ரொனிபிளேயர், 18 வருட காலம் அஞ்ஞாத வாசம் செய்து தொழில் கட்சியை முன்னணி நிலைக்குக் கொண்டு வந்து, 1997 ஆம் ஆண்டில் பெரும் வெற்றி பெற்றிருந்தார்.

மீண்டும் 2001 ஆம் ஆண்டிலும் தொழில் கட்சி மாபெரும் வெற்றி ஈட்டியது. 2005 ஆம் ஆண்டின் முறபகுதியில் மற்றுமொரு பொதுத தேர்தலை நடத்துவது ரொனிபிளேயரின் நோக்கமாகும். இதற்கிடையில அவரது 50வது பிறந்த தினக் கொண்டாட்டப் பரிசாக பதவி விலகல அறிவிப்புக்களை விடுக்க வேணடும் என்ற வகையில் கட்சி ஆதரவாளர்கள் விடுத்தகோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார். (யே-9)



காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை எம்.எல்.ஏ., புரசை பி. ரங்கநாதன் அக்கட்சியில் இருந்து விலகி கருணாநிதி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.

# பயங்கரவாதத் தாக்குதல் அச்சம்: ஜப்பானில் தீவிர பாதுகாப்பு!

(டோக்கியோ)


அமெரிக்காவுக்கு ஆதரவாக ஈராக்குக்குப் படைகளை அனுப்ப ஜப்பான் முடிவு செய்ததை அடுத்து, அந் நாட்டுக்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதல் அச்சம் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து, தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பயங்கரவாத தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து ஏதாவது தகவலோ, மிரட்டலோ வந்ததா என்பதைத் தெரிவிக்க அந்நாட்டு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

ஈராக் மீது அமெரிக்கா கடந்த ஆண்டு மார்ச் மாதம் படையெடுத்தது. அதைத் தொடர்ந்து பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், ஜப்பானின் நாணயமான யென்னின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக குறைந்துவிட்டது. (யே-9)



புத்த காயாவில் உள்ள மஹாபோதி கோயிலை புனிதஸ்தலமாக அறிவிக்கக் கோரி புத்த மதத்தினர் கோரிக்கை எழுப்பி வந்தனர்.
இது தொடர்பிலான தீர்மானம் ஐ.நா.சபையால் நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து அந்தக் கோயிலை மலர்களால் அலங்கரிக்கும் புத்ததுறவி.

## பூனைக்கும் புலிக்கும் பறவைக் காய்ச்சல்

தாய்லாந்தில் கோழி இறைச்சியை உண்டதனால் வீட்டில் செல்லப்பிராணியாக வளர்க்கப் பட்டு வந்த பூனை ஒன்று பறவைக் காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளது.

அத்துடன் மிருகக்காட்சிச் சாலையில் இரண்டு புலிகளுக்கும் இந் நோய் ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

நோயுற்ற இம் மிருகங்கள் மீது மேறகொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் பறவைக் காய்ச்சல் நோயை ஏற்படுத்தும் கிருமிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

பூனைக்கும் புலிக்கும் இக் காய்ச்சல் தொற்றுவது உலகிலேயே இது தான் முதல் தடவை என்று ஆராய்ச்சியாளரொருவர் கூறியுள்ளார்.

நோயுற்ற இம் மிருகங்களில் ஒரு பூனையும் ஒரு புலியும் இறந்து விட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (து)

# நேபாளத்தில் மோதல் தீவிரவாதிகள் 10 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த மோதலில் 10 மாவோ தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர், 10 பேர் சரணடைந்தனர்.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து தென்மேற்கில் உள்ள பங்கே மாவட்ட பங்கத்வாலா கிராமத்தில் நடந்த மோதலில் 7 மாவோ தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பதுகாப்புப் படையினர் மீது தீவிரவாதிகள் குண்டுகளை வீசினர் இதையடுத்து,

மேலும் மொஹத்தாரி மாவட்டம் சுந்தர்பூர் அசோக் தோல் என்ற இடத்தில் நடந்த மோதலில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இம் மாதத் தொடக்கத்தில் டேப்பிள்ஜங் மாவட்டம் செகுவா பாலம் அருகே நடந்த மோதலில் காயமடைந்த 5 தீவிரவாதிகளில் ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்தார். கிழக்கு தன்குடா மற்றும் பக்தர் மாவட்டங்களில் 10 தீவிரவாதிகள் கடந்த வெள்ளியன்று சரணடைந்தனர்.

மாவோ படைகளின் கமாண்டர் ககன் பகதூர் பாரதி கடந்த ஆண்டு டிசம்பரில் ஆயுதங்களை உள்ளாட்சி நிர்வாகத்திடம் ஒப்படைத்தார். இதற்காக அவருக்கு நேபாள அரசு ரூ.54 ஆயிரம் பரிசளித்தது.

இதற்கிடையில் சர்கேட் மாவட்டம் ரகம் கிராமத்தில்மாவோ பயங்கரவாதிகள் விட்டுச் சென்ற குண்டு வெடித்ததில் 3 குழந்தைகள் காயமடைந்தனர்.

சிர்ஹா மாவட்டத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்ட 5 பேரை உள்ளாட்சி நிர்வாகம் விடுதலை செய்துள்ளது. (யே-9)

## வாஜ்பாய் லக்னோவில்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவரது சொந்தத் தொகுதியான லக்னோவுக்கு நேற்று விஜயம் செய்துள்ளார்.

இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து அரசியல் நடவடிக்கைகளைப பற்றி அவர் ஆராயவிருக்கின்றார்.

முஸ்லிம் அமைப்புகள் உட்பட பல அமைப்புகளுடன் இந்தியப் பிரதமர் இந்த விஜயத்தின் போது பேச்சு வார்த்தை நடத்தவிருக்கின்றார்.

இந்தத் தொகுதியிலேயே மீண்டும் போட்டியிடுவது குறித்து வாஜ்பாய ஆலோசித்து வருகின்றார்.

அதன் முன்னேற்பாடாக நேற்றும், இன்றும் பல விசேட பேச்சு வார்த்தைகளிலும் அவர் கலந்துகொண்டார். (யே-9)

# சர்வதேச செஞ்சிலுவை அதிகாரிகள் சதாம் ஹுசைனைப் பார்வையிடுவர்

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம்ஹுசைனை முதல் தடவையாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்க இராணுவம் சதாம்ஹுசைனைக் கைது செய்த பின்னர் முதற்தடவையாக இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

சதாம் ஹுசைனின் உடல் நிலை பற்றியோ, அல்லது அவரது மனநிலை பற்றிய விபரங்கள் எதையும், செஞ்சிலுவை அதிகாரிகள் வெளியிடவில்லை. சதாம் ஹுசைனைச் சந்தித்த குழுவில் வைத்தியர் ஒருவரும் அரபு மொழியில் கதைக்கக் கூடிய ஒருவரும் இடம் பெற்றதாக செஞ்சிலுவை அதிகாரியான மூவின் ஹாஷீஸ் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு ஈராக்கில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு இடத்தில் இடம் பெற்றதாகவும், இதில் அமெரிகக் பிரதிநிதிகள் எவரும் இடம்பெறவில்லை என்றும் கூறப் படுகிறது.

தம்மை சந்தித்த குழுவினருடாகத் தமது உறவினர்களுக்கு தனது உடல் நிலை பற்றிய தகவல்களை சதாம் அனுப்பிவைத்திருக்கின்றார். (யே-9)

# உலக சாதனையை நிலைநாட்ட நாவினால் வரையும் இளைஞர்

(புதுச்சேரி)

புதுவையில் நாக்கினால் தொடர்ந்து நூறு மணிநேரம் ஓவியம் வரையும் சாதனையை 23 வயதுடைய ஆர்.ராஜேந்திரன் என்ற இளைஞன் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கினார்.

புதுவைக் கல்வியமைச்சர் க.லட்சுமி நாராயணன் அவருடைய இந்த முயற்சியைத் தொடக்கி வைத்தார். முதல்வர் என்.ரங்கசாமி நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் 2020ல் இந்தியா வல்லரசாக விளங்கவேண்டும் என்றும் அதற்கு 2010க்கு முன்பாக நம் நாடு வறுமை, சுகாதாரம், கல்வி, கலைகள், வேலைவாய்ப்பு, ஏற்றுமதி, காப்பு அனைத்திலும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்றும் தொலை நோக்குப் பார்வையுடன் கூறியள்ளார்.

இதைச் செயல்படுத்த இளைஞர்கள் முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்தி நாக்கில்தூரிகை பிடித்து 100 மணி நேரம் தொடர்ந்து ஓவியம் வரையும் சாதனை முயற்சியைத் தொடங்கியுள்ளார் ராஜேந்திரன். நான்கடி அகலமும் ஐந்தடி உயரமும் கொண்ட கேன்வாஷில் ஓயில் பெயிண்டின் மூலம் 100 மணிநேரம் தொடர்ந்து ஓவியம் வரையும் சாதனை முயற்சியில் அவர் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார். (யே-9)

# அமெ.விமானங்களில் ஆயுதங்கள் கொண்டு செல்லத் தடை

(வாஷிங்டன்)

அமெரிக்க விமானங்களில் கத்தி, வெடி பொருட்கள் உள்ளிட்ட ஆயுதங்களைக் கொண்டு சென்றால் ரூபா 45 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஆண்டு தோறும் விமானப் பயணம் செய்யும் ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுடன் கத்தி, கத்திரிக்கோல், நகவெட்டிகள் மற்றும் துபபாக்கிகள் முதலியவற்றையும் எடுத்துச் செல்வதை தடை செய்யவே இந்த அபராதம் விதிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அமெரிக்கப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கொள்கைக்கான உதவி நிர்வாகி டாம் பிளாங்க், அமெரிக்காவில் 2001 செப்ரம்பர் 11 ஆம் திகதி நடைபெற்ற தாக்குதலுக்குப் பின் விமானப் பயணிகளிடமிருந்து 1650 துப்பாக்கிகள் மற்றும் 57 ஆயிரம் தடை செய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ளார். (து)

# புஷ்ஷின் குற்றச்சாட்டை மலேசியா நிராகரிப்பு

(கோலாலம்பூர்)

அணுவாயுதம் தொடர்பான விற்பனையில் மலேசியா தொர்புபட்டுள்ளதாக புஷ் கூறியுள்ள கருத்துக்கள், பொய்யானவை என்றும் குறிப்பிட்ட நபர், வர்த்தக எண்ணெய் விற்பனையில் மாத்திரமே மலேசியாவுடன் தொடர்புடையவர் என்றும், அந்நாட்டுப் பிரதமர் அப்துல்லா அஹமட் பதாவி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையினால் கறுப்புச் சந்தையில் காணப்படும் அணுவாயுதங்களைத் தடுக்க முடியுமா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (யே-9)



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து ஏற்றுமதி செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கார்களின் அணிவகுப்புதான் இது. கார்கள் மற்றும் பல்வேறு தயாரிப்புகளின் ஏற்றுமதியால்தான் ஜப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகிறது.

## இன்று ஒரு தகவல்

# அதிக நாள் வாழ

"இந்த உலகில் நீண்ட நாட்களுக்கு வாழவேண்டு மென்று ஆசைப்படுகின்றேன்'' என்றார் ஒருவர். இது அவருக்கும் அவஸ்தை மற்றவர்களுக்கும் அவஸ்தை என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லைப் போலும். இருந்தாலும் இப்படி ஒரு ஆசை எல்லோருக்கும் இருக்கத்தான் செய்கின்றது.

அதனால் தான் ஒருவர் இதைப்பற்றியே ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். அப்படி ஆரம்பித்து மனிதனின் ஆயுள் குறைவதற்குக் காரணமாக இருக்கின்ற விஷயங்கள் என்னென்ன என்று கண்டுபிடித்தார். அந்த ஆராய்ச்சியை எப்படிச் செய்தார் தெரியுமா? சுமார் 700 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்தார்.

ஏற்கனவே இது தொடர்பாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு அதன் பின் ஒரு முடிவுக்கு வந்தார். மனித உடலைப் பாதித்து ஆயுளைக் குறைக்கக் கூடிய 7 விடயங்களை அவர் கண்டுபிடித்தார். 1972 ஆம் ஆண்டு அவர் அதை வெளியிட்டாலும் அப்போது அவற்றை யாரும் பெரிதாக எடுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால் அவர் கூறிய விடயம் எல்லாம் மிகச் சாதாரணமான விடயங்களாகத் தெரிந்ததாம்.

அவர் கூறிய 7 விடயங்கள் என்னென்ன தெரியுமா? உடற்பயிற்சி இல்லாமல் போவது முதல் காரணம். மிகவும் பருமனாக இருப்பது இரண்டாவது காரணம். இது இரண்டும் மிகமோசமான விடயமாம். இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் மிக அதிகம் என்கிறார் அவர். நான்காவது அளவுக்கு மீறிக் குடிப்பது. உடற்பயிற்சி இல்லாதது. உடல் பருமனாக இருப்பது. இவையிரண்டுக்கும் அடுத்து உள்ள கெட்டபழக்கம் புகைப்பதும், குடிப்பதும் என்கிறார் அவர்.

சரி அதற்கு அடுத்து அவர் கூறிய விடயம் தான் மிக ஆச்சிரியமாக இருந்ததாம். அதாவது அதிக நேரம் தூங்குவது ஒன்று. சாப்பாட்டு நேரத்துக்கிடையில் எதையாவது கொறித்துக் கொண்டிருப்பது. அதற்கடுத்ததாக உள்ள கெட்டபழக்கம் என்ன தெரியுமா? காலையில் ஆகாரம் எதுவும் சாப்பிடாமல் இருப்பது.

இந்தப் பழக்கங்கள் ஆயுள்களைக் குறைத்து விடும் என்று அவர் கூறினார். அவரது பேச்சை ஆரம்பத்தில் யாரும் நம்பவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் இவர் கெட்டபழக்கம் என்று கூறிய பல விடயங்களை ஆரோக்கியமான விடயங்கள் என்று பலர் நினைத்துக் கொண்டிருப்பதுதான். ஆனால் அந்த ஆராய்ச்சியாளர் இன்னொரு காரியம் செய்தார். ஏற்கனவே பரிசோதனைக்கு எடுத்துக் கொண்ட அதே 700 பேரையும் தேடி 20 வருடங்களின் பின் இவர் மீண்டும் போனார். அவர்களில் பலர் ஏற்கனவே இறந்து போய் விட்டனர். இப்படி இறந்தவர்கள் இவர் ஏற்கனவே கண்டு பிடித்துச் சொன்ன 7 பழக்கங்கள் உள்ளவர்களாம்.

அதன் பின்னர்தான் அவர் கூறியது சரி என்று எல்லோரும் புரிந்து கொண்டனர். அதனால் நாமும் அவற்றை மனதில் வைத்துக் கொள்வது நல்லது. உடற்பயிற்சியின்மை, பருமனாக இருப்பது, அளவுக்கு மீறி குடிப்பது, அதிக நேரம் தூங்குவது, காலையில் உணவு உண்ணாமல் இருப்பது போன்றன மனிதனின் ஆயுளைக் குறைக்கும் என்பது ஒரு உண்மையான கண்டுபிடிப்பு.

ஒரு வயதான தாத்தா ரயிலில் போய்க் கொண்டிருந்தார். பல் இல்லை. கன்னத்தில் குழி. கண்ணிரண்டும் உள்ளேபோய்க் கண்ணாடி அணிந்திருந்தார். அவருக்கு எதிரில் இருந்த ஒருவர் அவரைப் பார்த்து தாத்தா இந்த வயதிலும் இப்படி தனியே பயணிப்பதைப்பார்க்கும் போது மிகுந்த சந்தோஷமாக உள்ளது. ''நமது ஆயுளைக் குறைக்கக் கூடிய 7 விடயமும் உங்களிடம் இல்லை போல் தெரிகிறது'' என்றார். அந்தத் தாத்தா நிமிர்ந்து பார்த்தார். யார் சொன்னது அப்படி? என்னிடம் எல்லாக் கெட்டபழக்கமும் உண்டு. சிகரைட் குடிப்பேன், சாராயம் குடிப்பேன், நீங்கள் கூறும் விடயம் எதுவும் எனக்குப் பொருந்தாது என்றார். இவர் மிவும் ஆச்சரியப் பட்டுபோய் "அப்படியென்றால் உங்கள் வயது என்ன தாத்தா? என்று கேட்டார். இவர் நிமிர்ந்து அவரைப் பார்த்து இந்த டிசம்பர் வந்தால் 24" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜே.வி.பி. இனவாதக்கட்சி என்றால் யாழ். நூலகத்தை தீ மூட்டியவர் யார்?

## கேள்வி எழுப்புகிறார் விமல்வீரவன்ச


(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியை இனவாதக் கட்சியென விமர்சிப்பவர்களுக்கு,ஐக்கிய தேசியக் கட்சி இனவாதக் கட்சி என்பது புரியவில் லையா? இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சி ஒன்றிற்கு நேற்று முன்தினம் அவர் வழங்கிய பேட்டியின் போதே இவ்வாறு கேள்வியை எழுப்பியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்தவரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் வெவ்வேறான நிலைப்பாடுகளில் உள்ளன. ஆனால், பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் தீர்வே இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக அமையும் என்பதில் இரு கட்சிகளும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன.

இந் நிலையில், மக்கள் விடுதலை முன்னணி சமாதானத்தைக் குழப்பும் இனவாதக் கட்சியெனப் பலராலும் விமர்சிக்கப்படுகிறது.



இவ் வாறு கடுமையாக எம்மைச் சாடும் ஐக்கிய தேசியக் கட்சியினரே உண்மையான இன வாதிகள். இவர்களே 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜுலையை நடத்தியவர்கள். உலகப் புகழ்பெற்ற யாழ்ப்பாண நூலகத்தை தீ மூட்டியவர்கள். இவ் வாறு இன விரோத வன செயல்களில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சி இன வாதக் கட்சி என் பது எவருக்கும் புரியவில்லையா?

ஆனால், எமது கட்சி தமிழருக்கோ முஸ்லிம்களுக்கோ இன ரீதியான வன்முறைகளை இது வரை திணிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-60,04)

# கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் கூட்டணியை ஒழித்துவிடச் சதி!

## ஆனந்த சங்கரி கவலை தெரிவிப்பு

(லண்டன்)

கட்சி உறுப்பினர்களின் பதவி மோகத்தால் கட்சியின் கொள்கைகளும். இலட்சியங்களும் காற்றோடு பறக்கின்றன. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கவலை தெரிவித்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் அங்கம் வகித்து வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் பிளவுகள் ஏற்படுத்துள்ளதால் கட்சியின் வேட்பாளர்களை முறைப்படி தேர்வு செய்யமுடியாதிருக்கின்றது.



இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளே வேட்பாளர்களைத் தெரிவு செய்து தேர்தலில் நிறுத்தவேண்டும்'' எனக் குறிப்பிட்டு கூட்ட ணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைத் தான் வெளியிட்டமையின் முக்கியமான நோக்கம் என்னவென்பது பற்றி பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியில் விளக்கியுள்ளார்.

அவரது செவ்வியின் தொகுப்பு வருமாறு, கடந்த 18 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமனக் குழு கூடியது . அந்த நியமனக் குழுவில் எமது கட்சியைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் போதியளவு இல்லையென்பதால் விண்ணப்பத்தை முறைப்படி கோரி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தேன்.

அது தவறும் பட்சத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடைய வேட்பாளர்கள் தெரிவுக்கு நாம் முழு ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் உள்ள சகல கட்சிகளும் ஒதுங்கிக் கொள்ளவேண்டும்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒழிக்கவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வந்துள்ளன.

எனினும், அக்கட்சிகளின் நோக்கம் வெற்றி பெறவில்லை. இதனால் படிப்படியாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சித்தார்கள்.

இவர்களின் தீயநோக்கங்களினால்தான் நான "உதய சூரியன்" சின்னத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் விகிக்கும் ஏனைய கட்சிகள் போட்டியிடக் கூடாது என்றும்,கட்சியின் வேட்பாளர்களை முறைப்படி தெரிவு செய்ய முடியாதென்றால் விடுதலைப்புலிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யலாம் என்றும் கூறியிருந்தேன்.

இதே சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சரி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் சரி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்.அதற்காக ஒன்று பட்டுச் செயற்படவேண்டும் என்றார். (ந-62,10)

## இராசிபலன்

**23. 02. 2004**
**(மாசி 11, திங்கட்கிழமை)**
**சித்தம்**

| | | |
|---|---|---|
| திருதியை | பிற்பகல் 2.59 | மணிவரை |
| உத்தரட்டாதி | பிற்பகல் 3.52 | மணிவரை |
| இராகுகாலம் | 08.01-9.31 | மணிவரை |
| சுபநேரம் | 12.31-02.01 | மணிவரை |

**மேடம்**
உறவினர் வெறுப்பு, பொருள் விரயம், திடீர் நன்மை, காரிய அலைச்சல்.

**இடபம்**
நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், கஷ்டதுரையாடல், பெருமையடைதல்.

**மிதுனம்**
அதிக பிரயாசை, தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், பிறருக்கு உதவுதல்.

**கடகம்**
கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், காரிய தாமதம், புத்திசாதுரியம்.

**சிங்கம்**
காரியத் தடங்கல், உடல் நலக்குறைவு, வாகன பயம், கலகம்.

**கன்னி**
குடும்ப சுகம், தொழில் நன்மை, பிரயாணம், முயற்சி கைகூடும்.

**துலாம்**
தடைபட்ட காரியம் கைகூடும், தொழில் வருமானம், உடல் நலம், உறவினர் சந்திப்பு.

**விருச்சிகம்**
வியாபார நன்மை, உடல் நலக் குறைவு, பணத்தட்டுப்பாடு, புதிய திருப்பம்.

**தனுசு**
மாதா சுகம், ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், சிந்தனை மிகுதி.

**மகரம்**
பிரயாண நன்மை,நல்ல வருமானம், அதிக பிரயாசை, அந்நியர் சந்திப்பு,

**கும்பம்**
கௌரவக் குறைவு, தன விரயம், தொழில் முயற்சி, நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**
கற்பனை மிகுதி, போசன சுகம் முயற்சி கைகூடும், தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# கோப்பாய் பகுதியில் சட்டவிரோத கள் விற்பனை

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியிலுள்ள சில வீடுகளில் மாலை வேளைகளில் பனங் கள்ளு விற்பனை செய்யப் பட்டு வருகின்றது.

இதனால் அந்திசாயும் வேளைகளில் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் குழுக் களாகவும் தனியாகவும் இவ்வீடுகளுக்கு வந்து போவதால்,அப்பகுதி வாழ் குடியிருப்பாளர்கள தரப்பில் அச்சமும் பீதியும் நிலவுவதாகக் கூறப் படுகிறது.

குருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள வேளையில் இவ்வாறு கள் விற்பனை செய்கின்றமை வீண் வாக்குவாதங்களையும் கோஷ்டி மோதலையும் ஏற்படுத்த வாய்ப்புண்டு எனவும், சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள முன்வரவேண்டுமெனவும் குடியிருப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-79)

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் - குறள்

வலம்புரி

# மக்களின் இருப்பை அச்சுறுத்தும் கொள்ளைச் சம்பவம்

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த கொள்ளைச் சம்பவம், யாழ்.குடாநாட்டு மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் பட்டப் பகலில் துப்பாக்கியால் சுட்டுவிட்டுக் கொள்ளையடித்துச் செல்லும் அளவில் யாழ்.குடா நாட்டின் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு என்பன சீர்குலைந்து போயுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் சொத்துக்களை, சுகபோகங்களை இழந்த யாழ்ப்பாண மக்கள் மீண்டும் தங்களின் இருப்பை நிரந்தரமாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில், இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கி விடுவதாகவுள்ளது.

1996 களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற களவுகளும் திருட்டுக்களும் ஏராளம். இரவு வேளைகளில் வீடு புகுந்து களவெடுக்கும் சம்பவங்கள் இப்போதும் பரவலாக நடைபெறறு வருகின்றன.

இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலங்களிலேயே மிகப்பரவலாக நடைபெற்றது. இது விடயத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாராமுகமாக இருந்தமையால் அவற்றின் தாக்கம் வலுப்பெற்றுவிட்டது.

இதனால் தற்போது இரவுவேளை என்றால் மக்கள் வீட்டுக்குள் ஏக்கத்துடன் முடங்கிக் கொள்ளும் பரிதாப நிலையைக் காணமுடிகின்றது.

இத்தகைய களவுகள் கத்தி, பொல்லு, வாள் என்ற கருவிகளோடும், சிறுவர்களின் துணையோடும் நடந்து வருவது கண்டறியப்பட்ட உண்மைகள். இக்களவினை ஊக்குவிப்பதாகவும் திட்டமிடுங்களமாகவும் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் விளங்குகின்றன.

இத்தகைய களவுகள் பல சந்தர்ப்பங்களில் பொதுமக்களால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதும் உண்டு.

ஆனால், சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் பகல்வேளையில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் வித்தியாசமானது.

இராணுவச்சீருடை தரித்து மோட்டார் சைக்கிளில் துப்பாக்கியுடன் வந்த இனந்தெரியாதவர்கள் நகைகளுடன் வந்தவரைச் சுட்டுவிட்டு கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவமானது இனிமேல் யாழ்ப்பாணத்தில் துப்பாக்கி முனைகளில் களவுகளும் கொள்ளைகளும் இடம்பெறும் என்பதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் பாதாள உலகக் கோஷ்டி நடத்தும் கொள்ளைச் சம்பவங்களின் பின்னணியை ஒத்ததாக சாவகச்சேரியில் நடந்துள்ள கொள்ளைச் சம்பவம் குறித்து பொது மக்களும் பொது அமைப்புகளும் அரச அதிகாரிகளும் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

தனியொரு நபருக்கு ஏற்பட்ட இழப்பு என்ற அசமந்தத்தில் கொள்ளைச் சம்பவம் குறித்து பொதுமக்கள் பேசாதிருப்பார்களானால் துப்பாக்கி முனையில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்கள் வீட்டுக்குவீடு, சந்திக்குச் சந்தி நடக்கவே செய்யும்.

எனவே இதுவிடயத்தில் பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்து இத்தகைய கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க முன்வரவேண்டும்.

1996 களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் களவு, கொள்ளை மற்றும் கலாசாரச் சீரழிவுச் சம்பவங்களினால் மக்கள் மனம் நொந்துபோயுள்ளனர்.

அதேவேளை பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டனர் என்ற மனக்குறையும் மக்களிடம் நிறையவே இருக்கின்றது.

இந்நிலையில், கொள்ளையர்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், பொலிஸார் தம்மீதான நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இல்லையேல் பொலிஸார் மீதான நம்பகத்தன்மை எதிர்மறையாவதுடன் யாழ்ப்பாண இருப்புப் பற்றியும் மக்கள் மீளாய்வு செய்வர்.

# பொதுத் தேர்தலை முன்னிட்டு தென்பகுதியில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் பொலிஸ் தலைமையகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தென்பகுதியில் பாதாள உலகக் கோஷ்டியினரின் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதையிட்டு தேர்தல் காலங்களிலும் அவர்களது குற்றச் செயல்கள் இடம்பெறலாம் என்ற ஐயத்தின் பேரிலேயே கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் தற்போது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன், திட்டமிட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக, நேற்றுமுன்தினம் காலை கொழும்பை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தீவிர தேடுதல் நடவடிக்கைகளின் போது, பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர் ஒருவர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி எஸ்.சம்புத்திரஜீவ தெரிவித்துள்ளார்.

(ந-18)

# பல்லின ஜனநாயக நடைமுறைக்கு வடக்குக் கிழக்கில் இடமளியுங்கள்!

## பாக்கியசோதி சரவணமுத்து வேண்டுகோள்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஜனநாயக நடைமுறைகளுக்கும் பல்லின சுதந்திர செயற்பாடுகளுக்கும் இந்தத் தேர்தலில் இடமளிக்கப்பட வேண்டுமென்று வலம்புரியின் தேர்தல் களம் பகுதிக்கு அளித்த விசேட பேட்டியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவரும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் தலைவருமான திரு.பாக்கியசோதி சரவணமுத்து வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து கருத்துக் கூறிய அவர் கடந்தகாலத் தேர்தல்கள் இந் நாட்டில் வன்முறையும் இரத்தக்களரியும் நிறைந்தவொரு நிகழ்வாகவே இருந்து வந்திருக்கின்றன. அதன் அடிப்படையிலேயே பார்க்கின்றபோது இம் முறையும் தேர்தல் பெரும் வன்முறைகளும், இரத்தக்களரியும் நிறைந்ததாகவே காணப்படும். ஆயினும் அவ்வாறான நிலைமைகள் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பமும் எதிர்பார்ப்புமாகும் என்று சொன்னார்.

கொழும்பு மற்றும் மத்திய மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றிவாய்ப்பு அதிகமாக இருக்கின்றது. ஏனெனில் மலைநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினுடனான கூட்டு கொழும்பில் வர்த்தக மற்றும் நடுத்தர, உயர்வர்க்க மக்களின் ஆதரவும் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கே இருந்து வருவதும் ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி ஆட்சியமைக்கும் சாத்தியக் கூறுகளை நிராகரிப்பதாக நீங்கள் கருதுவீர்களா என்று கேட்டதற்கு,

இந்த வாதத்தில் உண்மை இருக்கத்ததான் செய்கிறது. ஆயினும் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படும் விதம், தேர்தல் நடைபெறும் விதம் என்பவற்றைப் பொறுத்தும் முடிவுகளில மாற்றங்கள் வரலாமென்று அவர் தெரிவித்தார்..

இந்தத் தேர்தலில் தமிழர் கூட்டணியைப் பற்றிய அவரது எண்ணப்பாட்டைக் கேட்டதற்கு இரண்டு பெரும் கூட்டமைப்புக்களும் மிகச் சிறிய வித்தியாசத்தில் வெற்றிபெறுகின்ற பட்சத்தில் தமிழர் கூட்டமைப்பு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக வர நிறையவே சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆயினும் என்னுடைய எதிர்பார்ப்புக்கள் வரப்போகும் பாராளுமன்றம் ஒரு தொங்கு பாராளுமன்றமாகவே வரப்போகின்றது என்றே எண்ணவைக்கின்றது என்றார் அவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள், பிளவுகள் பற்றிக் கருத்துக் கூறிய அவர் கட்சிப் பிரச்சினைகள், கட்சியின் உட் பூசல்கள், தலைமைப்போட்டிகள் என்பவற்றுக்கும் அப்பால் வடக்குக் கிழக்கில் ஜனநாயக நடைமுறைகளுக்கும் பல்லின தன்மைகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். தேர்தலில் தகுதியுள்ள, விருப்பமுள்ள, வேட்பாளர்கள் போட்டியிடவும், மக்கள் தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களிக்கவும் கூடிய ஜனநாயகச் சுதந்திரத்திற்கு இடமளிக்கப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார். (யே)

## தேர்தல் களம்

# தமிழர் தமது ஒருமித்த ஒற்றுமையை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும்

தமிழர்கள் தமது ஒற்றுமையை ஏகோபித்த முறையில் உலகிற்கு வெளிப்படுத்த வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். இதன் தார்ப்பரியத்தை சகலரும் உணர்ந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும் என்று வலம்புரியின் தேர்தல் களம் பகுதிக்கு அளித்த விசேட பேட்டியின் போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (சுரேஸ் அணி) வன்னித் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இப்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்டிருக்கும் பிளவுகள் தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்கப் போகின்றது என்று கேட்டபோதே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவப் போட்டியும், அதன் அடிப்படையிலான பிணக்குகளும் அவர்களுடைய கட்சியின் உட்பிரச்சினை என்றே கொள்ளப்பட வேண்டியது. ஆனால் தற்போதைய காலகட்டத்தை கருத்திற்கொண்டு தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து ஒற்றுமையாக செயலாற்ற அனைவரும் முன்வர வேண்டும். உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் கவலைக்குரியது. அதுவும் இந்தக் காலகட்டத்தில் தமிழரின் ஒட்டு மொத்த சக்தியையும் சீர்குலைக்க பல சக்திகள் போட்டி போட்டுக்கொண்டு செயலாற்றி வரும் இக் காலகட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகள் முனைப்பாக வெளிவருவது தமிழர்களின் அரசியல் எதிர்காலத்திற்கு பல முட்டுக்கட்டைகளை உருவாக்க வல்லது என்றார்.

உதயசூரியன் சின்னத்தில் தமிழர் கூட்டமைப்பு போட்டியிட முடியாத நிலையென்பது அதற்குப் பழக்கப்பட்ட வாக்காளர் மத்தியில் குழப்ப நிலையையும், தமிழர் கூட்டமைப்புக்கு ஒருவித பாதகத் தன்மையையும் ஏற்படுத்தாதா என்று கேட்டதற்கு,

நிச்சயமாக அவ்வாறான நிலைமை ஏற்படாது. ஏனெனில் புலிகளின் ஏகோபித்த அனுசரணையுடனேயே தமிழர் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுகிறது. காலத்தின் தேவை என்ன என்பதை தமிழ் மக்கள் நன்குணர்ந்திருக்கின்றார்கள். தவிரவும் தமிழர் கூட்டமைப்பு எந்தச் சின்னத்தில் போட்டியிடுமென்று மக்கள் ஆவலாகக் காத்திருக்கின்றனரேயொழிய உதயசூரியன் சின்னம் கிடைக்காதா என்ற அங்கலாய்ப்பில் அவர்கள் இல்லை என்று தெரிவித்தார்.

இத்தேர்தல் பற்றிய உங்கள் எதிர்வு கூறல் என்ன என்று கேட்டதற்கு இத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு நிச்சயமாக இருபதுக்கும் அதிகமான ஆசனங்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து பெறும். அது மட்டுமல்லாமல் மத்தியில் அரசாட்சி அமைப்பது யார் என்பதை தீர்மானிக்கும் சக்தியாகவும் அது விளங்குமென்றும் தெரிவித்த அவர் கடந்த இரண்டு வருடகாலமாக நடைமுறையில் இருந்து வரும் யுத்த நிறுத்த உடன்பாடும் அமைதிச் சூழலும் தொடர்ந்தும் பேணப்பட்டும் சமாதானமுயற்சிகள் தொடர்வதோடு தமிழர்களுக்கு பூரண உரிமையைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒரு தீர்வை நோக்கிச் செல்வதற்கு இந்தத் தேர்தலின் முடிவுகள் பெரிதும் பங்களிப்புச் செய்யப்போகின்றன. ஆதலினால் மக்கள் மிகுந்த அவதானத்துடனும் ஒற்றுமையுடனும், உற்சாகத்துடனும் இத்தேர்தலில் பங்குகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.(யே)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நாம் எஜமானனைப் போல் காரியங்கள் செய்யவேண்டும். அடிமையைப் போல் செய்யக்கூடாது. சுதந்திரத்தோடு காரியங்களைச் செய்! அன்பு மயமாகக் காரியங்களைச் செய்!

சுதந்திரமில்லாதவரையில் ஒரு மனிதனிடம் அன்பு தோன்றுவதில்லை. அடிமையினிடத்தில் உண்மையான அன்புக்கு இடமேயில்லை.

சுவாமி சிவானந்தர்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

## மீனாட்சி கல்யாண கதாப்பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் கோவில் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த சர்மா இன்று மீனாட்சி கல்யாணம் எனும் தலைப்பில் கதாப்பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார். (ச)

# அம்பாறை மாவட்டத்தின் தலைமை வேட்பாளராக அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் "இதயம்" என்று கருதப்படுகின்ற அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைமை வேட்பாளராக நான் போட்டியிடுகிறேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காஙகிரசின் நிலைப்பாடு தொடர்பாக ரவூப் ஹக்கீம் தொடர்ந்த கருத்துத் தெரிவிக்கையில்:

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வட-கிழக்கில் தனித்துவமாக மரச்சின்னத்திலும், வட-கிழக்குக்கு வெளியே ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தும் போட்டியிடுகிறோம். இதன் பிரகாரம் வடகிழக்குக்கு வெளியே ஏழு மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டாலும் அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி ஒரு தனிக் குழுவாக இருந்து சுதந்திரமாக முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரத்தையுடையவர்களாக போட்டி இடுகிறோம்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பே முஸ்லிம் காங்கிரசின் சங்குநாதமாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே கிழக்கு முஸ்லிம்களின் இதயமான அம்பாறை மாவட்டத்தில் தலைமை வேட்பாளராக நான் நின்று எனக்கு எதிராக வரக்கூடிய அத்தனை சவால்களை முறியடிக்கவுள்ளேன். அதற்காகத்தான் நான் எனது சொந்த மாவட்டத்தைத் துறந்துள்ளேன் என்றும் ஹக்கீம் கூறியுள்ளார். (ம)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392 சிவன் கோவில் வீதி
Fax : 222 3214 காரைநகர்
E.mail : smskr@eureka.lk T.P : 06022125

# வலை, கரப்பந்தாட்டங்களில் யாழ்.மாவட்ட அணி முதலிடம்

(கிளிநொச்சி)

மூன்றாவது தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் யாழ்.மாவட்ட அணிக்குமிடையில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி 81:11 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட அணிக்கும் அம்பாறை மாவட்ட அணிக்குமிடையில் நடைபெறவிருந்த கரப்பந்தாட்டப்போட்டியில் அம்பாறை அணி கலந்துகொள்ளாததால் யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள் வருமாறு,

யாழ்ப்பாண அணிக்கும் முல்லைத்தீவு அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் யாழ்.அணி வெற்றிபெற்றது. கிளிநொச்சி அணிக்கும் வவுனியா அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

இதேவேளை மன்னார் அணிக்கும் அம்பாறை அணிக்குமிடையிலான போட்டியில் அம்பாறை அணி கலந்து கொள்ளாததினால் மன்னார் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ச-68)

# ஆட்சியைக் கைப்பற்றும் கட்சியுடன் பேச்சுக்கள் நடத்தப் புலிகள் தயார்

(கொழும்பு)

தென்னிலங்கைத் தேர்தல் முடிவுகளில் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றும் எந்தக் கட்சியுடனும் அமைதிப் பேச்சுகளை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலக செயலாளர் எஸ். புலித்தேவன் இது குறித்து கூறுகையில், இலங்கை அரசுக்கும் எமது இயக்கத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிலை குறித்தே தாம் கவலைப்படுவதாகவும் சிங்கள அரசியல் கட்சிகள் வெளியிடும் கருத்துகள் குறித்து கவலைப்படவில்லை என்றும் கூறினார். ஜே.வி.பி.யின் விமல் வீரவன்ச, புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து கேள்வி எழுப்புகிற அதிகாரம் கொண்டவர் அல்ல என்றும் புலித்தேவன் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. (ந)

# தனியார் பஸ் தடம் புரண்டு சிறுமி உட்பட இருவர் பலி

## பூவரசங்குளத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்ற தனியர் பஸ் ஒன்று பூவரசங்குளம் பகுதியில் விபத்துக்குள்ளானதில் 4 வயதுச் சிறுமி உட்பட இருவர் பலியாகினர். 17 போ படுகாயமடைந்துள்ளனர்.

வேகமாசச் சென்ற பஸ் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதனாலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது மன்னாரைச் சேர்ந்த கிருபகரன் கிருபாசினி (வயது 4), உடையார் கட்டைச் சேர்ந்த கே.சாந்தலிங்கம் (வயது 60) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர். காயம் அடைந்தவர்களில் இருவர் அநுராதபுரம் வைத்தியசாலையிலும், ஏனையோர் வவுனியா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக, சாரதியும் நடத்துநரும் வவுனியாப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-13)

## பொது...

டிக்கை எடுப்பதற்கு தமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனக் கூறியதுடன் அவ் விடயங்கள் குறித்து இராணு உயர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவதாகவும் தெரிவித்துள்ளனர். கலந்துரையாடலின் இறுதியில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இச் சந்திப்பின் போது பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சார்பில் அகில இலங்கை சைவகுருமார்கள் ஒன்றியத்தின் செயலாளர் மகாலிங்கக் குருக்கள்,தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.சிறிசக்திவேல், வண.பிதா பேர்ணாட் அடிகளார், மனித நேய அமைப்புக்களின் தலைவர் பரமநாதன் செயலாளர் தர்மரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-19)

## வாஷிங்டன்...

சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்புக்களில் வாஷிங்டன் மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் முடிவுகள் குறித்து இருவரும் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## சோதனைச்...

ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதியில் முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய இடங்களிலும், கிழக்குப் பகுதியில் மூதூர் கிழக்கு, வாழைச்சேனை, கிரான், செங்கலடி, பட்டிருப்பு ஆகிய இடங்களுக்கு படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து வாக்களிக்க செல்லும் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் தமது கண்காணிப்பு நடவடிக்கைகள் அமையுமெனவும் கண்காணிப்பு குழு பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## மாவை...

பத்திரத்திலும் வேட்பாளர்கள் அனைவரும் கையொப்பமிட்டனர் இன்று வேட்புமனுத்தாக்கல் இடம் பெறும் (த)

## பொதுத் தேர்தலில்...

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள, சமயத் தலைவர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், சமூகத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து தேர்தல் வன்முறைகளைக குறைக்கும் நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் தங்கியிருக்கும் போது தேர்தல் கண்காணிப்பாளர்களின் பணியின் முக்கிய பகுதி கலந்துரையாடுவதேயாகுமென அவர் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளை குறைப்பது பற்றி இப்பிரிவினருடன் கலந்துரையாடுமாறு கண்காணிப்பாளர்களை தாமே கேட்டிருந்ததாக கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்தார்.

மேலும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பற்றி ஏற்கனவே பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆரம்பமே அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. இதனாலேயே தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் ஏற்படும் வன்முறைகளைக் குறைப்பதற்கு எம்மால் முடிந்தவரை பணியாற்றுவோம் என்றார்.

இதற்கென 168 மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதே வேளை ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் சென்று காலை 7மணி முதல் மாலை 4 மணிவரை கண்காணிப்புப் பணியிலிடுபடுமாறு தேர்தல் ஆணையாளர் கடந்த வாரம் பெபரல் அமைப்பிற்கு உத்தரவிட்டுள்ளார். உளநூர் கண்காணிப்பு அமைப்பொன்று தேர்தல் ஆணையாளரிடமிருந்து இத்தகைய உத்தரவைப் பெறுவது இதுவே முதன்முறை என்றும் ரொட்றிக்கோ தெரிவித்தார். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள அல்லது முஸ்லிம இனத்தவரையே கண்காணிப்பாளராக அனுப்ப வேண்டும் என ஈ.பி.டி.பி தூதுக் குழு பெபரல் அமைப்பை கேட்டுள்ளது. (ந-6)

யாழ்.நகரிலும் வந்து விட்டது
பிறேம் அற்ற (Rimless) மூக்குக் கண்ணாடிகள்
ஆம்
சொலெக்ஸ் ஒப்ரிக்கல்
&
டென்ரல் வேக்ஸ்
உங்களிற்கு புத்தம் புதியதாக முதன் முறையாக அறிமுகப்படுத்துகிறார்கள் யாழ்.நகரிலேயும் (Rimless) மூக்குக் கண்ணாடிக ளையும் சன் கிளாஸ் வகைகளையும்:
இவற்றுடன்:-
* கண்பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்
* பல்சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து சீர் செய்து கொள்ளவும்
* வசீகரமான சங்குப் பற்களை சொந்தப் பற்களுக்கு நிகராக கட்டிக் கொள்ளவும்
அனைத்தும் ஒரே நிறுவனத்தின் கீழ்
சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்
516, ஆஸ்பத்திரி வீதி,
O.P.D முன்பாக
யாழ்ப்பாணம் T.P : 222 7631
(சி-7284)

சங்குநாதம்




சூடு பிடிக்கிறது தேர்தல்களம்
- கோவையூர் ஜெயன்
தேர்தல் ஆடுகளத்தில் காயாக சுமதிபால பழமாக சோமவன்ச
- பவானி
வாழ்வை வளம்படுத்த துரைமுருகர் எழுதும்
என் சோதிடம்
கே.வி.குணசேகரம் எழுதும்
கல்தூண்கள் (தொடர்கதை)
வியாசரின் பதில்கள்
ஆலடி மாநாடு
சினிமாச் சிதறல்
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்
வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்
விலை ரூபா. 16.00

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.